தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

### இன்று விவசாயிகள் குறைதீர்வு கூட்டம்

திருவள்ளூர்,

திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை (பிப்.21) நடைபெறுகிறது.

மாதம்தோறும் 3-வது வெள்ளிக்கிழமைகளில் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் நடைபெறும். அந்த வகையில், இந்த மாதத்துக்கான குறைதீர்வு நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவராவ் தலைமையில் காலை 11 மணியளவில் நடைபெறுகிறது. மாவட்டத்தில் உள்ள விவசாயம் சார்ந்த அனைத்து துறை அலுவலர்களும் இதில் பங்கேற்கின்றனர். எனவே மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் இக்கூட்டத்தில் பங்கேற்று பயன்பெறலாம்.

### காணை நோய் தடுப்பூசி சிறப்பு முகாம்

பேரையூர்,

மதுரை மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமப் பகுதிகளிலும் மார்ச் 1 முதல் 21-ம் தேதி வரை காணை நோய் தடுப்பூசி முகாம் நடைபெற உள்ளது.

இது குறித்து தமிழ்நாடு கால்நடை உதவி இயக்குநர், டாக்டர் ஜெகன்முத்தையா நிருபர்களிடம் கூறியதாவது: மதுரை மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமப் பகுதிகளிலும் கால்நடை துணை இயக்குநர் ஆலோசனை மற்றும் மாவட்ட ஆட்சியர் சுப்பிரமணியன் உத்தரவின் பேரில் மார்ச் 1 முதல் 21-ஆம் தேதி வரை காணை நோய் தடுப்பூசி முகாம்கள் நடைபெற உள்ளன.

இந்த முகாமில் கோமாரி நோய், காணை நோய் தடுப்பூசிகள் போடப்பட உள்ளது. வருவாய்த்துறையினர், ஊரகவளர்ச்சித்துறையினர் மற்றும் சுய உதவிக்குழுக்கள் ஒருங்கிணைந்து முகாம்களை நடத்த உள்ளனர். கால்நடைகள் வைத்திருக்கும் அனைத்து பொதுமக்களும் பங்குபெற்று பயன்பெறலாம்.மேலும் பேரையூர்,

தே.கல்லுப்பட்டி பகுதிகளில் கால்நடைகளுக்கு தீவனங்கள் தேவைப்படுவோர் தங்கள் பகுதியில் உள்ள கால்நடை மருத்துவரின் பரிந்துரைக் கடிதம் பெற வேண்டும். அதனுடன், குடும்ப அட்டை நகல் மற்றும் இரு புகைப்படங்களை இணைத்து திருமங்கலம் தீவனக்கிடங்கில் கொடுத்து மானிய விலையில் தீவனங்கள் பெற்றுக்கொள்ளலாம் என்றார்.

**இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

திண்டுக்கல்,

விவசாயிகளுக்கான குறைதீர் கூட்டம் பிப்ரவரி 21ஆம் தேதி (வெள்ளிக்கிழமை) நடைபெறும் என, மாவட்ட ஆட்சியர் ந. வெங்கடாசலம் அறிவித்துள்ளார்.

இது குறித்து, அவர் தெரிவித்துள்ளது: கூட்டத்தில் அனைத்து துறை அலுவலர்களும் பங்கேற்க இருப்பதால், விவசாயிகள் பங்கேற்று தங்கள் கோரிக்கைகளை தெரிவிக்கலாம். மேலும், கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தின்போது, விவசாயிகள் அளித்த கோரிக்கை மனுக்களுக்கான பதில்கள் இந்த கூட்டத் தொடரில் வழங்கப்படும்.

எனவே, மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் பங்கேற்று பயன்பெறலாம் எனத் தெரிவித்துள்ளார்.

**ஒட்டன்சத்திரம் அருகே தண்ணீரின்றி கருகிய மிளகாய் செடிகள்**

ஒட்டன்சத்திரம்,

ஒட்டன்சத்திரம் அருகே தண்ணீரின்றி காய்ந்து கருகிப்போன மிளகாய்ச் செடிகளைப் பார்த்து, விவசாயிகள் வேதனையடைந்து வருகின்றனர்.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தை அடுத்த தேவத்தூர், 16 புதூர், அம்பிளிக்கை, காவேரியம்மாபட்டி, பெரியகோட்டை, சத்திரப்பட்டி, விருப்பாச்சி உள்பட பல கிராமங்களில் மிளகாய், காளிபிளவர், கத்தரிக்காய், முருங்கைக்காய் போன்ற காய்கறிகளை விவசாயிகள் அதிக அளவில் விவசாயம் செய்வது வழக்கம். இந்த ஆண்டு பருவமழை கை கொடுக்கம் என்று நம்பி ஏராளமான விவசாயிகள் நகையை அடகு வைத்தும், வட்டிக்கு கடன் வாங்கியும் விவசாயம் செய்தனர். ஆனால், பருவமழை பொய்த்துவிட்டதால், மிளகாய் மற்றும்

காளிபிளவர், கத்தரிக்காய் உள்ளிட்ட பயிர்கள் கடுமையான வறட்சியால் தண்ணீரின்றி காய்ந்து கருகி விட்டன.

அதேபோல், 1200 அடிக்கு ஆழ்துளைக் குழாய் போட்டாலும் தண்ணீர் கிடைப்பது அரிதாகிவிட்டது. இதனால், ஒட்டன்சத்திரம் பகுதி விவசாயிகள் வேதனையில் உள்ளனர். எனவே, திண்டுக்கல் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து, தமிழக அரசு உடனடியாக வறட்சி நிவாரணம் வழங்கவேண்டும் என்று, கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து, 16-புதூரைச் சேர்ந்த விவசாயி செல்லமுத்து கூறுகையில், இப்பகுதியில் ஏராளமான விவசாயிகள் மிளகாய், கத்தரிக்காய், பருத்தி, மக்காச்சோளம் போன்ற பயிர்களை ஆண்டுதோறும் பயிர் செய்வது வழக்கம். இந்த ஆண்டு பருவமழை பொய்த்துவிட்டதால், விவசாயம் செய்யப்பட்ட பயிர்கள் அனைத்தும் காய்ந்து கருகி விட்டன. விவசாயிகளுக்கு ஏராளமான நஷ்டம் ஏற்பட்டுள்ளது. எனவே, தமிழக அரசு உடனடியாக வறட்சி நிவாரணம் வழங்கவேண்டும் என்றார்.

**"முன்பணம் செலுத்துவோருக்கு மட்டுமே முட்டை விநியோகம்'**

பெருந்துறை,

தேசிய மண்டல முட்டை ஒருங்கிணைப்புக் குழு ஆலோசனைக் கூட்டம் (என்.ஈ.சி.சி.), பெருந்துறையில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில், என்.ஈ.சி.சி. சேர்மன் செல்வராஜ் தலைமை வகித்துப் பேசுகையில், இனிவரும் 5 மாத காலங்களில் முட்டை உற்பத்தி குறையும். அதனால், தேவைக்கு ஏற்ப உற்பத்தி இருக்காது. மற்ற மாநில முட்டையை விட தமிழகத்தில் உற்பத்தியாகும் முட்டை நல்ல தரத்துடன் உள்ளதால், சந்தையில் தமிழக முட்டைகளுக்கு நல்ல கிராக்கி உள்ளது. தற்போது, முட்டை உற்பத்தி குறைவு காலமாக இருப்பதால், சந்தையில் முட்டைகளுக்கு நல்ல கிராக்கி இருக்கும். இந்த நேரத்தில் பண்ணைக்காரர்கள், முன்பணம் செலுத்துபவர்களுக்கு மட்டும் சப்ளை செய்ய வேண்டும். இன்றும் சில பண்ணைக்காரர்களிடம் முன்பணம் செலுத்தி வியாபாரிகள் முட்டை எடுத்து வருகிறார்கள். இதை நாமும் பழக்கத்திற்கு கொண்டு வர வேண்டும்.

இது பழக்கத்திற்கு வந்தால் முட்டை உற்பத்தி அதிகமாக இருக்கும் காலத்திலும், பணம் கொடுத்து வியாபாரிகள் முட்டை எடுக்கும் பழக்கத்திற்கு வந்து விடுவார்கள்.

புதியதாக பண்ணை அமைப்பவர்கள், ஒரு கோழிக்கு செட் போட குறைந்தது ரூ.600 வரை செலவு செய்ய வேண்டும். தொழிலாளர்கள் தட்டுப்பாடு மற்றும் தண்ணீர் பிரச்னை போன்றவை உள்ளது. ஆகவே, புதிய பண்ணைகள் வருவதற்கு வாய்ப்புகள் மிகக் குறைவு.

என்.ஈ.சி.சி. விலைக்கு பண்ணைக்காரர்கள் முட்டை விற்பனை செய்வதால் நல்ல விலை கிடைக்கிறது. மேலும், நுகர்வோர்களுக்கு குறைந்த விலைக்கு முட்டை கிடைக்கிறது என்றார்.

முன்னதாக, என்.ஈ.சி.சி. ஈரோடு வட்டாரத் தலைவர் சண்முகம் வரவேற்றார். தமிழ்நாடு கோழிப் பண்ணையாளர்கள் சங்கத் தலைவர் நல்லதம்பி உள்பட கோழிப் பண்ணை உரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 43.42 அடி

ஈரோடு,

வானிசாகர் அணை நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 43.42 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 839 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 200 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 4.01 டி.எம்.சி.

## திருந்திய நெல் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு உதவித்தொகை

அரக்கோணம்,

அரக்கோணத்தை அடுத்த நெமிலி வட்டார வேளாண் துறை சார்பில் கணபதிபுரம் உள்ளிட்ட 19 கிராமங்களில் திருந்திய நெல் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு உதவித் தொகை வழங்கும் நிகழ்ச்சி கணபதிபுரத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு வட்டார உதவி வேளாண் அலுவலர் தென்னரசு

தலைமை தாங்கினார். இதில் 85 விவசாயிகளுக்கு திருந்திய நெல் சாகுபடி செய்ததற்கான தலா ரூ.3 ஆயிரம் வீதம் உதவித்தொகை மற்றும் மானிய விலையிலான இடுபொருள்களை வேளாண் அலுவலர் பிரபுதாஸ் வழங்கினார்.

இதில் வேளாண் துணை அலுவலர் கோதண்டம், வேலூர் மாவட்ட ஊராட்சி உறுப்பினர் சேகர், கணபதிபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் முஸ்தபா (எ) முனுசாமி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

### ஒகேனக்கல்லுக்கு கூடுதல் நீர்வரத்து

தருமபுரி,

ஒகேனக்கல் காவிரி ஆற்றுக்கு வரும் நீரின் அளவு வியாழக்கிழமை சற்று அதிகரித்துக் காணப்பட்டது.

கர்நாடக மாநிலம், கிருஷ்ணராஜசாகர் அணையில் இருந்து சில நாள்களாக 4,553 கன அடி நீர் காவிரி ஆற்றில் திறந்து விடப்பட்டு வருகிறது.இந்த நீர் பிலிகுண்டுலுவுக்கு வியாழக்கிழமை வந்ததால், ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர் வரத்து கூடுதலாக இருந்தது.

### பிப்.26-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

நாமக்கல்,

நாமக்கல் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி தலைமையில் பிப்ரவரி 26-ஆம் தேதி நடைபெற உள்ளது.மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் அன்று காலை 10.30 மணிக்கு தொடங்க உள்ள இந்தக் கூட்டத்தில், மாவட்டத்திலுள்ள விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்று, தங்களது குறைகளை நேரடியாகவோ, மனுக்கள் மூலமாகவோ தெரிவிக்கலாம் என மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நாமக்கல் கூட்டுறவு நிலையத்தில் ரூ.1.70 கோடிக்கு பருத்தி ஏலம்

நாமக்கல்,

நாமக்கல்லில் வியாழக்கிழமை பருத்தி ஏலத்தில் 9000 மூட்டை பருத்தி ரூ.1.70 கோடிக்கு ஏலம் போனது.

நாமக்கல்லில் திருச்செங்கோடு சாலையிலுள்ள கூட்டுறவு வேளாண் விற்பனை நிலையத்தில் வாரந்தோறும் வியாழக்கிழமை பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது.

இந்த ஏலத்துக்கு நாமக்கல் மாவட்டம் மட்டுமன்றி சேலம், பெரம்பலூர், கரூர், திருச்சி மாவட்டத்துக்கு உள்பட்ட துறையூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து விவசாயிகள் பருத்தி மூட்டைகளைக் கொண்டு வருகின்றனர்.

வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு 9000 பருத்தி மூட்டைகள் வந்தன. அவற்றில் ஆர்சிஹெச் ரகம் குவிண்டால் ரூ.4877 முதல் ரூ.5379 வரையும், டிசிஹெச் முதல் தரம் ரூ.6941 முதல் ரூ.7406 வரையும், இரண்டாம் தரம் ரூ.5319 முதல் ரூ.5591 வரையும், சுரபி ரூ.5500 முதல் ரூ.6200 வரையும் என மொத்த பருத்திகளும் ரூ.1.70 கோடிக்கு ஏலம் போனது என்று, கூட்டுறவு வேளாண் விற்பனை நிலைய அலுவலர்கள் தெரிவித்தனர்.

## பெனுகொண்டாபுரம் ஏரி பாசனக் கால்வாயில் தண்ணீர் வராததால் விவசாயிகள் வேதனை

போச்சம்பள்ளி,

கிருஷ்ணகிரி மாவட்டம், மத்தூர் அருகேயுள்ள பெனுகொண்டாபுரம் ஏரியிலிருந்து திறக்கப்பட்ட தண்ணீர் பாசனக் கால்வாயில் கடைமடைப் பகுதிக்கு வராததால், விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம், மத்தூர் அருகேயுள்ள பெனுகொண்டாபுரம் ஏரிக்கு பாரூர் ஏரியில் இருந்து நீர் வருகிறது. இந்த ஏரியின் பிரதானக் கால்வாய் 12 கிமீ. தொலைவுக்குச் செல்கிறது. இந்தக் கால்வாயில் 25 மதகுகள் உள்ளன. இந்த கால்வாய் பாசனம் மூலம் சுமார் 2,000 ஏக்கர் வரை விளை நிலங்கள் பாசன வசதியைப் பெறுகின்றன.

கடந்த மாதம் ஏரியின் மொத்த உயரமான 19 அடியில் 17 அடி வரை நீர்த் தேக்கி வைக்கப்பட்டது. போதிய நீர் இருப்பு இருந்ததால், பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது. கால்வாயில் பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்ட 12 மணி நேரத்தில் எட்டப்பட்டி ஊராட்சியில் உள்ள கடை மடைப் பகுதிக்கு தண்ணீர்

சென்றடைய வேண்டும். ஆனால், இந்த முறை பாசனத்திற்கு தண்ணீர் திறந்து சுமார் 23 நாள்களானபோதும் கடை மடைப் பகுதிக்கு தண்ணீர் சென்றடையவில்லை. இதனால், கால்வாய்ப் பாசனத்தை நம்பி விவசாயப் பணிகளை மேற்கொண்ட விவசாயிகள் பெரும் கவலையடைந்துள்ளனர்.

குறிப்பாக கடை மடைப் பகுதியில் 4 கிமீ. தொலைவுக்கு தண்ணீர் வராததால், 500-ஏக்கருக்கும் மேற்பட்ட விளை நிலங்களில் சாகுபடிப் பணிகளைத் தொடங்கிய விவசாயிகள் தண்ணீர் வரததால், ஏமாற்றமடைந்துள்ளனர்.

இந்தக் கால்வாயின் பாசனப் பகுதிகளான ஒட்டப்பட்டி, கொடமாண்டப்பட்டி, எட்டிப்பட்டி, வாலிப்பட்டி, அந்தேரிப்பட்டி, ஆகிய கிராமங்களில், கால்வாய் தொடங்கும் பகுதியில் உள்ள ஒட்டப்பட்டி, கொடமாண்டப்பட்டி பகுதியில் மதகுகளை முறையற்ற வகையில் திறந்து அளவுக்கு அதிகமாக நீரைப் பயன்படுத்துவதால், கடைமடைப் பகுதிக்கு தண்ணீர் வந்து சேரவில்லை என பெனுகொண்டாபுரம் பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் சௌந்திரராஜன் தெரிவித்தார்.

தமிழக விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் தேவேந்திரன் கூறியது:

கால்வாயைப் பராமரிக்கும் பொதுப் பணித் துறை பொறியாளர்கள், திருட்டுத்தனமாக தண்ணீரை எடுப்பவர்கள் மீதும், பாசனக் கால்வாயை உடைத்தும், அடைத்தும் பெருமளவு நீரைப் பயன்படுத்துபவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்காததால், நத்தகயம் பகுதியில் இருந்து கடைமடைப் பகுதி வரை கால்வாயில் தண்ணீர் வரவில்லை என்றார்.

இதுகுறித்து ஊத்தங்கரை பொதுப் பணித் துறை பொறியாளர் நாகராஜன் கூறியது:

போதுமான ஊழியர்கள் இல்லாததால் மதகுகளைத் தொடர்ந்து காண்காணிக்க முடியவில்லை.

மேலும், தற்போது ஏரியில் நீர்மட்டம் குறைந்ததால், கடைமடைப் பகுதிக்கு தண்ணீர் செல்ல போதுமான அழுத்தம் கிடைக்காது என்றார்.

கால்வாய் தொடங்கும் இடத்தில் அதிகளவு தண்ணீர் பயன்படுத்தப்பட்டதால், சாகுபடிக்குத் தயாராக இருந்தும் விவசாயப் பணிகளை மேற்கொள்ள முடியாததால், கடைமடைப் பகுதி விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.

எனவே, தற்போது ஏரியில் உள்ள நீரையாவது கடைமடைக்குச் செல்லும் வகையில் பொதுப் பணித் துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## "ராபி பருவத்துக்கு பயிர் காப்பீடு செய்ய பிப். 28 கடைசி நாள்'

தஞ்சாவூர்,

தஞ்சாவூர் மாவட்டத்தில் ராபி பருவப் பயிர்களுக்கான காப்பீடு பிப். 28-ம் தேதிக்குள் செய்து கொள்ளலாம்.

இதுகுறித்து வேளாண் காப்பீட்டுத் திட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வ. பழனியப்பன் தெரிவித்திருப்பது: தஞ்சாவூர் மாவட்டத்தில் ராபி பருவத்தில் உளுந்து, பயறு, எள், கடலை, கரும்பு, வாழை ஆகிய பயிர்களுக்கு அறிவிக்கப்பட்ட வருவாய் சரக (பிர்கா) விவசாயிகள் இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம். உளுந்துக்கு ஏக்கருக்கு ரூ. 132, பயறுக்கு ரூ. 87, எள்ளுக்கு ரூ. 238, கரும்புக்கு ரூ. 1,431, வாழைக்கு ரூ. 7,055 பிரீமியமாக செலுத்த வேண்டும். இந்தத் திட்டத்தில் எந்தெந்த வருவாய் சரகம் சேரலாம் என்பதை சம்பந்தப்பட்ட வங்கிகளிலோ அல்லது 94437 80661 என்ற எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம்.

இந்தத் திட்டத்தில் அனைத்து பயிர்களுக்கும் கடன் பெறும், கடன் பெறாத விவசாயிகள் பிப். 28-ம் தேதிக்குள் பிரிமியம் செலுத்தி சேரலாம்.

## பிப். 28-ல் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம்

தஞ்சாவூர்,

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும் 28-ம் தேதி காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதுகுறித்து ஆட்சியர் என். சுப்பையன் மேலும் தெரிவித்திருப்பது: இந்தக் கூட்டத்தில் விவசாயிகள், முன்னோடி விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் அனைவரும் நீர்ப்பாசனம், கால்நடை, கூட்டுறவு, மின்சாரம், வேளாண்மைப் பொறியியல் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தோட்டக்கலைத் துறை போன்ற விவசாயம் தொடர்புடைய கருத்துகளை மட்டும் தெரிவிக்கலாம். இதில், கருத்துகளைத் தெரிவிக்க விரும்புபவர்கள் தங்களது பெயர், ஊர்,

வட்டாரத்தை பிப். 28-ம் தேதி காலை 8.30 மணி முதல் 10 மணி வரை கணினியில் பதிவு செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு வட்டாரத்துக்கும் பதிவு செய்துள்ள விவசாயிகளில் முதல் இரு நபர்கள் தங்களது கருத்துகளைத் தெரிவிக்க அனுமதிக்கப்படுவர்.

**"மீண்டும் இயற்கை விவசாயத்துக்கு செல்ல வேண்டும்'**

பெரம்பலூர்,

மீண்டும் இயற்கை விவசாயத்துக்குச் செல்ல வேண்டும் என்றார் தமிழக விவசாயிகள் சங்க மாநிலச் செயலர் ஆர். ராஜாசிதம்பரம்.

பெரம்பலூரில், இயற்கை வேளாண் விஞ்ஞானி அமரர் கோ. நம்மாழ்வார் படத்திறப்பு மற்றும் இயற்கை வேளாண் கருத்தரங்கம் மாவட்ட சமூக செயல்பாட்டு இயக்கம் சார்பில் புதன்கிழமை நடைபெற்றது.

இதில், இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ. நம்மாழ்வாரின் படத்தை திறந்து வைத்த அவர் மேலும் பேசியது:

பி.டி பருத்தி, மக்காசோள சாகுபடி, ரசாயன உரங்களை பயன்படுத்த வேண்டாமென தெரிவித்தபோது, விவசாயிகள் அதை பொருட்படுத்தவில்லை. தற்போது மண் விஷமாகி, மண்ணின் தன்மை சீரழிந்துவிட்டது. மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளை பயன்படுத்துவதால், பராம்பரிய விதைகளை பயன்படுத்துவது கிடையாது. விதைச்சட்டத்தின் மூலம் போலியான விதைகளை விற்பனை செய்தால் 5 ஆண்டு சிறை தண்டனை கொடுக்கலாம் என சட்டம் கூறுகிறது. கர்நாடகத்தில் இயற்கை விவசாய பொருள்களுக்கு அரசு மானியம் அளிக்கிறது. நீடித்த நிலைத்த பண்ணை விவசாயம் தவிர்த்து, கூட்டு விவசாயம் எப்படி செய்ய வேண்டுமென கற்றுக்கொள்ள வேண்டும். அடுத்த தலைமுறைக்கு, இந்த நிலத்தை விட்டு செல்ல வேண்டும். மீண்டும் இயற்கை விவசாயத்துக்கு விவசாயிகள் திரும்ப வேண்டும் என்றார் அவர்.

நிகழ்ச்சிக்கு, மாவட்ட சமூக செயல்பாட்டு இயக்கத் தலைவர் சாமிநாதன் தலைமை வகித்தார்.

இதில், நகர்மன்றத் தலைவர் ஆர்.டி. ராமசந்திரன், வேளாண்மை அலுவலர் (ஓய்வு) பழனி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். பெரம்பலூர் மாவட்ட தேசியப்படை

ஒருங்கிணைப்பாளர் முகமது உசேன் வரவேற்றார். தொண்டு நிறுவன இயக்குநர் சம்பத் நன்றி கூறினார்.

**திருவட்டாறு பகுதியில் மழை**

குலசேகரம்,

திருவட்டாறு பகுதியில் வியாழக்கிழமை மாலை பலத்த மழை பெய்தது.

குமரி மாவட்டத்தில் கடந்த இரு மாதங்களாக வறண்ட கால நிலை நிலவி வருகிறது.

வெப்பத்தின் தாக்கம் காரணமாக மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். நடவு செய்யப்பட்டுள்ள தென்னை, வாழை, மரச்சீனி உள்ளிட்டப் பயிர்கள் தண்ணீரின்றி கருகி வருகின்றன. பொதுவாக பிப்ரவரி மாதம் அதிக மழை பெய்ய வாய்ப்பில்லாத போதும், அவ்வப்போது மழைகள் பெய்வதுண்டு. இந்த மழையை விவசாயிகள் காடு கரிச்சான், காடு துளிர்த்தான் மழை என்று கூறுகின்றனர். இந்த மழையால் வாடி நிற்கும் பயிர்களுக்கு ஆறுதல் கிடைக்கும். மாவட்டத்தில் கடந்த இரு நாள்களுக்கு முன்பு தக்கலை சுற்றுவட்டாரப் பகுதிகளில் மழை பெய்தது. வியாழக்கிழமை தக்கலை, வில்லுக்குறி, வேர்க்கிளம்பி, திருவட்டாறு, குலசேகரம் உள்ளிட்டப் பகுதிகளில் மழை பெய்தது. இந்த மழையினால் இப்பகுதிகளில் வெப்பம் தணிந்தது.

மாவட்டத்தின் இதரப் பகுதிகளில் ஆங்காங்கே மழை பெய்த போதும் பேச்சிப்பாறை உள்ளிட்ட அணைப் பகுதிகளில் மழை பெய்யவில்லை.

**பேச்சிப்பாறை வேளாண் அறிவியல் மையத்தை இடம் மாற்றும் நடவடிக்கை**

குலசேகரம்,

பேச்சிப்பாறையில் இயங்கி வரும் வேளாண் அறிவியல் மையத்தை, விவசாயிகளின் எதிர்ப்பையும் மீறி இடமாற்றம் செய்யும் நடவடிக்கைக்கு விவசாயிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

பேச்சிப்பாறை தோட்டக் கலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் வேளாண் அறிவியல் மையம் கடந்த 10 ஆண்டுகளாக இயங்கி வருகிறது.

இம் மையம் மூலம் மலையோரப் பகுதி விவசாயிகளுக்கு பல்வேறு விவசாயத் தொழில்நுட்பப் பயிற்சிகள், வானிலை முன்னறிவிப்பு ஆகியவை அளிக்கப்படுகின்றன.

இந்நிலையில், இந்த மையத்தை நாகர்கோவில் அருகேயுள்ள திருப்பதிசாரத்துக்கு மாற்றும் நடவடிக்கையை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் 2010-ல் மேற்கொண்டது. இதற்கு அப்போதைய எம்எல்ஏ ஆர். லீமாரோஸ், மலையோரப் பகுதி விவசாயிகள், பழங்குடி மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் இத் திட்டம் நிறுத்திவைக்கப்பட்டது.

இதனிடையே, இத் திட்டத்துக்கு வேளாண் பல்கலைக்கழகம் கடந்த ஆண்டு மீண்டும் உயிரூட்டியது. இதற்கு விவசாயிகளிடையே மீண்டும் பலத்த எதிர்ப்பு கிளம்பியது.

இம் மையத்தை இடமாற்றம் செய்யக் கூடாது என வலியுறுத்தி பத்மநாபபுரம் எம்எல்ஏ டாக்டர் புஷ்பலீலா ஆல்பன் தலைமையில் பேச்சிப்பாறையில் அண்மையில் ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது.

இந்நிலையில், இம் மையத்தை இடமாற்றம் செய்யும் நடிவடிக்கையை வேளாண் பல்கலைக்கழகம் இப்போது தீவிரப்படுத்தியுள்ளதாக விவசாயிகள் ஆதங்கம் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து மாவட்ட அன்னை தெரசா அன்னாசிப் பழ உற்பத்தியாளர் சங்கத் தலைவர் பி. ஹென்றி கூறியதாவது:

வேளாண் அறிவியல் மையத்தை திருப்பதிசாரத்துக்கு மாற்றுவது ஏற்புடையதல்ல. இதனால், பேச்சிப்பாறை பகுதி விவசாயிகள் பாதிக்கப்படுவர். வேளாண் பல்கலைக்கழகத்தின் இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து எதிர்த்து வருகிறோம்.

இந்நிலையில், பேச்சிப்பாறை வேளாண் அறிவியல் மையத்திலிருந்து அலுவலகப் பயன்பாட்டுப் பொருள்களை புதன்கிழமை இரவு வாகனத்தில் ஏற்றிச் சென்றுள்ளனர். இது கண்டிக்கத்தக்கது. வேளாண் அறிவியல் மையம் தொடர்ந்து பேச்சிப்பாறையில் இயங்க வேண்டும். இக் கோரிக்கையை வலியுறுத்தி தொடர் உண்ணாவிரதம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என்றார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

"கால்நடைக்கு பீட்ரூட் தர வேண்டாம்' மருத்துவ கல்லூரி பேராசிரியர் தகவல்

**நாமக்கல்:** "கால்நடை வளர்ப்போர், அதற்கு உணவு கொடுக்கும் போது, பீட்ரூட் உள்ளிட்ட காய்கறிகளை,அப்படியே கொடுக்க வேண்டாம். அவ்வாறு கொடுத்தால், மாடுகளுக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டு, உயிருக்கு ஆபத்தான நிலை ஏற்படும்' என, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய சிகிச்சைத் துறை பேராசிரியர் செல்வராஜ் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை:

கரூர் அடுத்த தளவாய்பாளையத்தை சேர்ந்த சுப்ரமணியன் என்பவர், தனது ஜெர்சி கலப்பின கறவை மாடு, வயிறு உப்பிசம், வாயில் உமிழ்நீர், கழுத்து வீக்கம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டு, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து வந்தார்.

மாட்டை பரிசோதனை செய்தபோது, அதன் தொண்டை உணவுக்குழியில் அடைப்பு ஏற்பட்டது தெரியவந்தது. பின்னர், மாட்டின் வாயில், கையை விட்டு பார்த்தபோது, அதன் தொண்டை உணவு குழாயில், பெரிய அளவிலான பீட்ரூட் இருந்தது. அதனை வெளியே எடுத்தபின், மாடு இயற்கையான நிலைக்கு திரும்பியது.

அதேபோல், திருச்செங்கோடு அடுத்த சித்தாளந்தூரைச் சேர்ந்த வடிவேல் என்பவரின் கோல்ஸ்டியன் - பிரிசியன் என்ற கலப்பின மாடுக்கு, தொண்டையில் அடைப்பு ஏற்பட்டபோது, அதன் வாயிலும் பீட்ரூட் இருந்தது.

எனவே, கால்நடை வளர்ப்போர், காய்கறிகளில் பீட்ரூட், கேரட், கத்திரிக்காய், குச்சிக்கிழங்கு, மாங்காய், மாங்கொட்டை, பனங்கொட்டை, சப்போட்டா ஆகியவற்றை மாடுகள் உண்ணும்போது, தொண்டையில் அடைபடும். அதனை

தவிர்க்க, காய்கறி உள்ளிட்ட உணவு பொருட்களை தனித்தனியாக வெட்டி, சிறுசிறு துண்டுகளாக தர வேண்டும். கவனக்குறைவாக செயல்பட்டால், மாடுகளின் உயிருக்கு, ஆபத்தான சூழ்நிலை உருவாகும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கோமாரி நோய் தடுப்பூசி முகாம் மீண்டும் 21 நாட்கள் நடத்த முடிவு**

கோமாரி நோய் தடுப்பூசி முகாம்களை, தமிழகம் முழுவதும் மார்ச் மாதத்திலிருந்து, 21 நாட்கள் நடத்த, கால்நடைத் துறையினர் முடிவு செய்துள்ளனர். கோமாரி நோயிலிருந்து கால்நடைகளை காப்பாற்ற, ஆண்டுக்கு இரு முறை தடுப்பூசி செலுத்த வேண்டும். தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் வரை, இதற்கான முகாம்களை கால்நடைத் துறையினர் நடத்த, அரசு உத்தரவிட்டுள்ளது. தற்போது ஆறாவது தடுப்பூசி முகாம், மார்ச் 1ம் தேதி முதல், 21 நாட்கள், தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தி முடிக்க, கால்நடைத் துறை திட்டமிட்டுள்ளது. இதற்கான ஊசி மருந்துகள், அந்தந்த மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. கோமாரி பாதிப்பால், கடந்தாண்டு இறுதியில், ஏராளமான மாடுகள் பலியாயின. அதேபோன்று இந்த ஆண்டு நடைபெறக் கூடாது என, அறிவுறுத்தப்பட்டுள்ளது. கால்நடைத் துறையினர் கூறுகையில், "தடுப்பூசி வேண்டாம் என, மாட்டின் உரிமையாளர் கூறினால், "நோய் பாதிப்பினாலோ அல்லது வேறு காரணங்களினாலோ மாடுகள் இறந்தால், அதற்கான பொறுப்பை ஏற்றுக் கொள்கிறேன்' என, எழுதி கையெழுத்து வாங்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது' என்றார்

**ரூ.11 லட்சம் மதிப்பில் கொப்பரை தேங்காய் ஏலம்**

**பெருந்துறை:** பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த ஏலத்தில், 11 லட்சம் ரூபாய்க்கு, கொப்பரை தேங்காய் ஏலம் விடப்பட்டது. இங்கு வாரம் தோறும் புதன் மற்றும் சனிக்கிழமை, ஏலம் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த ஏலத்துக்கு, பெருந்துறை மற்றும் சுற்றுப்பகுதி விவசாயிகள், 274 மூட்டைகளில், 13 ஆயிரம் கிலோ கொப்பரையை கொண்டு வந்திருந்தனர்.

இதில், முதல் தரம் கொப்பரை குறைந்த பட்ச விலையாக கிலோ, 84.10

ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 86 ரூபாய்க்கும் விற்பனையானது. இரண்டாம் தரம் கொப்பரை குறைந்தபட்ச விலையாக கிலோ, 66.40 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 81.75 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, 11 லட்சத்துக்கு ஏலம் மூலம் விற்பனையானது.

## பருத்தி வார சந்தையில்ரூ.2.15 கோடிக்கு வர்த்தகம்

**கள்ளக்குறிச்சி:**கள்ளக்குறிச்சி பருத்தி சந்தையில் நேற்று முன்தினம் 2.15 கோடி ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது.கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று முன் தினம் பருத்தி வார சந்தை நடந்தது. பல பகுதிகளைச் சேர்ந்த 824 விவசாயிகள் 12 ஆயிரம் பஞ்சு மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.எல்.ஆர்.ஏ.. பஞ்சு ரகம் ஒரு குவிண்டால் அதிகபட்சம் ரூ.5,469, குறைந்தபட்சம் ரூ.5,107க்கு விற்றது. சுவீன் பஞ்சு ரகம் ஒரு குவிண்டால் அதிகபட்சம் ரூ.7,607, குறைந்தபட்சம் ரூ.6,910க்கு விற்றது. விவசாயிகள் கொண்டு வந்த 12 ஆயிரம் பஞ்சு மூட்டைகளை 2.15 கோடி ரூபாய்க்கு கொள்முதல் செய்தனர்.

## தரிசு நிலங்களை பயன்படுத்துவது குறித்து நீர்வடி பகுதி மேம்பாட்டு இயக்குனர் ஆய்வு

**உளுந்தூர்பேட்டை:**உளுந்தூர்பேட்டை அடுத்த அஜீஸ் நகரில் தரிசு நிலத்தை விவசாயத்திற்காக பயன்படுத்துவது குறித்து தமிழ்நாடு நீர்வடி பகுதி மேம்பாட்டு முகமை இயக்குனர் ஆய்வு செய்தார்.கடலூர் மாவட்டம் நெய்வேலியில் வசித்தவர்கள் பலர் என்.எல்.சி.,க்கு இடம் கொடுத்தனர். அவர்களில் 500 குடும்பத்தினருக்கு விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை அஜீஸ்நகர் அருகே வீடு கட்ட 5 சென்ட் வீட்டுமனை, 2 ஏக்கர் நிலம் என 1,361 ஏக்கர் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் அந்த நிலம் பயன்பாடின்றி தரிசு நிலமாக உள்ளது. தரிசு நிலத்தை பயன்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் முடிக்கிவிட்டுள்ளனர்.அதன்பேரில் தமிழ்நாடு நீர் வடி பகுதி மேம்பாட்டு முகமை இயக்குனர் டாக்டர் சுரேஷ்குமார், அஜீஸ் நகர் பகுதிக்கு நேற்று மதியம் 12.15 மணிக்கு வருகை புரிந்து அப்பகுதி விவசாயிகளிடம் தரிசு நிலத்தை பயன்படுத்துவது குறித்து ஆலோசித்தார்.அப்போது சுரேஷ்குமார் விவசாயிகளிடம் பேசுகையில், தரிசு நிலத்தை பயன்படுத்துவதற்காக சிறப்பு நிதியாக ரூ.58 லட்சம்

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி 5 ஆண்டுகளுக்கு பகுதி வாரியாக விவசாய பயனன்பாட்டிற்காக பயன்படுத்தப்படும்.விவசாயத்தில் உழைப்பை பயன்படுத்துவதை பொறுத்து நிதிகள் முழுவதும் விரைந்து வழங்கப்படும். இந்த தரிசு நிலத்தில் நவீன முறையில் விவசாயம் செய்ய வேண்டும். தரிசு நிலத்தை விவசாயத்திற்காக பயன்படுத்துவதில் இப்பகுதி விவசாயிகள் இந்தியாவில் முன் மாதிரியாக திகழ வேண்டும். விவசாயத்திற்காக பயன்படும் இந்த நிலத்தை சுற்றி பாதுகாப்புகாக முள் செடிகளை வளர்க்க வேண்டும். அவற்றின் மூலம் வன விலங்குகளிடமிருந்து விவசாய பயிர்களை பாதுகாக்க முடியும். இவ்வாறு அவர் கூறினார்.வேளாண் இணை இயக்குனர் சக்கரவரத்தி, நீர் பிடிப்பு இணை இயக்குனர் ராஜேந்திரன், உதவி இயக்குனர் கோவிந்தன், உளுந்தூர்பேட்டை வேளாண் உதவி இயக்குனர் கருணாநிதி, மண்டல துணை தாசில்தார் வெங்கடேசன், துணை பி.டி.ஓ.,பாலசுப்ரமணியம் உட்பட பலர் உடனிருந்தனர்.

### தனியார் நிலத்தில் மரம் வளர்ப்பு திட்டம்

**உளுந்தூர்பேட்டை:**தமிழகத்தில் உயிர்பன்மை மற்றும் பசுமையாக்குதல் திட்டம், தனியார் நிலத்தில் மரம் வளர்ப்பு திட்ட செயல்பாடுகளை ஜப்பான் குழுவினர் ஆய்வு செய்தனர். இந்தியா உள்ளிட்ட வளரும் நாடுகளில் மரங்களை வளர்க்க ஜப்பான் அரசு முடிவெடுத்து நிதி ஒதுக்கீடு செய்தது. ஜப்பான் நாடு ரூ.600 கோடியில் இந்திய அரசுடன் ஜிக்கா (2013 முதல் 2018ம் ஆண்டு வரை) என்ற ஒப்பந்தம் செய்து, உயிர்பன்மை மற்றும் பசுமைப்படும் திட்டம், தனியார் நிலத்தில் மரம் வளர்ப்பு திட்டத்தை தமிழக வனத்துறை மூலம் செயல்படுத்தப்படுகிறது.இத்திட்டம் குறித்து ஜப்பான் நாட்டின் குழுகேஜினாமின் தலைமையில் 2 பேரும், ஓடிசா மாநில முதன்மை தலைமை வன பாதுகாவலர் வினோத்குமார், தலைமை வன பாதுகாவலர்கள் ரகுபிரசாத், திவாதி ஆகியோர் விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை பகுதியில் ஆய்வு செய்தனர். நேற்று முன்தினம் காலை 11 மணி முதல் மதியம் 1.30 மணி வரை உளுந்தூர்பேட்டை தாலுகா சேந்தமங்கலம், ஆரியநத்தம், மதியனூர் பகுதியிலுள்ள விவசாயிகளின் நிலத்தில் நடப்பட்டுள்ள மரங்களை நேரில் பார்வையிட்டனர். இவர்களுடன் தலைமை வன பாதுகாவலர் சஞ்சய்குமார்ஸ்ரீவத்சவர் வந்திருந்தார். உளுந்தூர்பேட்டை வன விரிவாக்க மையத்தில் நடந்த விவசாயிகள், சுய உதவி குழு கூட்டத்தில் பங்கேற்றனர். விழுப்புரம் வன பாதுகாவலர் கருணைப்ரியா,

மாவட்ட வன அலுவலர் சுஜாதா, வனவியல் விரிவாக்க அலுவலர் ஏழுமலை, வனசரக அலுவலர் தர்மலிங்கம், தொண்டு நிறுவன நிர்வாகிகள் வரவேற்றனர். தோட்டக்கலைத்துறை ஜோதிராமலிங்கம், உதவி வேளாண் அலுவலர் கருணாநிதி உட்பட பலர் உடனிருந்தனர்.

### தக்காளி ஆறுதல் விலை உயர்வு : புலம்பும் விவசாயிகள்

**கிணத்துக்கடவு :** கிணத்துக்கடவு மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் தக்காளி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இச்செடிகளில் இருந்து, விவசாயிகள் ஒரு நாள் விட்டு ஒரு நாள் தக்காளிகளை பறித்து, கிணத்துக்கடவு தினசரி மார்க்கெட்டுக்கு கொண்டு வந்து ஏலம் விடுகின்றனர். நேற்று, நடந்த ஏலத்தில், தக்காளி வரத்து குறைவாக வந்துள்ளதால், கேரளா மற்றும் உள்ளூர் வியாபாரிகளுக்குள் போட்டி ஏற்பட்டது. இதனால், 15 கிலோ எடையுடன் கூடிய தக்காளி பெட்டி ஒன்று 50 ரூபாய்க்கு ஏலம் போனது. கடந்த வாரத்தில், 15 கிலோ எடையுடன் கூடிய தக்காளி பெட்டி ஒன்று 30 ரூபாய்க்கு ஏலம் போனது. இதனால், கடந்த வாரத்தை காட்டிலும் நேற்று ஒரு கிலோ தக்காளி ரூ.3.50க்கு ஏலம் போனதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இருப்பினும், இந்த தக்காளி பெட்டி ஒன்று 75 ரூபாய்க்கு மேல் ஏலம் போனால் மட்டுமே கட்டுபடியாகும். தற்போது கிடைக்கும் விலை கூலி கொடுப்பதற்கு பற்றாக்குறையாக உள்ளது. விவசாயிகளே செடிகளில் இருந்து தக்காளி பறித்து வந்து ஏலம் விட்டால், கூலி மட்டுமே மிஞ்சுகிறது. அக்கூலியும் கூட குறைவு என்று புலம்பி வருகின்றனர்.

### கத்தரிக்காய் விலை உயரும் வேளாண் பல்கலை கணிப்பு

**கோவை :** தமிழகத்தில் சேலம், திண்டுக்கல், வேலுார் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் கத்தரி அதிகம் பயிரிடப்படுகிறது. இதில், சேலம் 11.9 சதவீத பங்களிப்புடன்

முதலிடத்தில் உள்ளது. அடுத்த மாதம் கத்தரிக்காய் விலை உயரும் என, வேளாண் விற்பனை சந்தை தகவல் மையம் அறிவித்துள்ளது. கோவை சந்தைக்கு தொண்டாமுத்துார், ஆலாந்துறை, கந்தேகவுண்டன் சாவடி மற்றும் சூலுார் பகுதிகளில் இருந்து அதிகம் வரத்து உள்ளது. கோவை மொத்த சந்தையில் வரி கத்தரிக்காய் கிலோவுக்கு எட்டு ரூபாய் வரை விலை கிடைக்கிறது.
ஆத்துார், கடலுார், பண்ருட்டி பகுதிகளில் இருந்து வரத்து அதிகரித்து இருப்பதால்,

தற்போது கத்தரிக்காய் விலை குறைந்து, கிலோ ஆறு ரூபாய்க்கு விற்கப்படுகிறது. எதிர்வரும் விலை நிலவரம் பற்றி விவசாயிகள் தெரிந்து கொள்ள வசதியாக, கோவை வேளாண் பல்கலை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் வேளாண் விற்பனை தகவல் மையம் கோவை, ஒட்டன்சத்திரம் மற்றும் தலைவாசல் மொத்த சந்தைகளில் உள்ள விலை விபரங்களை ஆய்வு செய்தது. அதன்படி, கத்தரிக்காய் பண்ணை விலை ஆறு ரூபாய் முதல் 10 ரூபாய் வரையிலும், மொத்த சந்தை விலை கிலோவுக்கு ஐந்து ரூபாய் முதல் எட்டு ரூபாய் வரையிலும் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இந்த விலை மார்ச் மாதம் மத்தியில் மேலும் உயரும் வாய்ப்பு உள்ளதாக, வேளாண் விற்பனை தகவல் மையம் தெரிவித்துள்ளது.

## கடல் கொந்தளிப்பால் மீனவர் தொழில் பாதிப்பு

**பழவேற்காடு :** கடல் கொந்தளிப்பால், மீனவர்கள் தொழிலுக்கு செல்லாமல், வலைகளை சரி செய்து வருகின்றனர்.வங்காள விரிகுடா கடற்பகுதியை ஒட்டியுள்ள பழவேற்காட்டில், 13 மீனவ கிராமங்கள், கடலில் மீன்பிடி தொழில் செய்து வருகின்றன. இந்நிலையில், இரு தினங்களாக, கடல் அலையின் சீற்றம் அதிகமாக காணப்படுகிறது.

கடல் சீற்றத்தை கண்டு, மீனவர்கள் மீன்பிடி தொழிலுக்கு செல்லாமல், தங்களது படகு மற்றும் மீன்பிடி வலைகளை சரி செய்து வருகின்றனர். படகுகள் பழவேற்காடு ஏரிக்கரைகளில் ஓய்வு எடுக்கின்றன.

மீனவர்களும் ஆங்காங்கே அமர்ந்து, தாயம் உருட்டுதல், பேசிக் கொண்டிருத்தல் என, பொழுதை கழித்து வருகின்றனர். மீன்வரத்து இல்லாததால், மொத்த வியாபாரிகளின் வாகனங்கள் வேலையின்றி, ஏரிக்கரை அருகே நிறுத்தப்பட்டு உள்ளன. ஏரியில் கிடைக்கும் மீன் மற்றும் இறால்களை, சிறு வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர். மீன் அங்காடியும், ஆள் நடமாட்டம் இன்றி வெறிச்சோடி கிடக்கிறது. கடல் சீற்றம் குறைந்தால்தான், தொழிலுக்கு செல்ல முடியும் என, மீனவர்கள் கூறுகின்றனர்.

## தமிழகம், கேரளாவில் முட்டை விலை 320 காசாக நிர்ணயம்

**நாமக்கல்:** தமிழகம், கேரளாவில் முட்டை விலை, 320 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம்,

நேற்று, நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 310 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, பத்து காசுகள் அதிகரித்து, 320 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. நாட்டின் பிற மண்டலங்களில், முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:

சென்னை, 345, பெங்களூரு, 335, மைசூரு, 337, ஹைதராபாத், 310, மும்பை, 348, விஜயவாடா, 310, கோல்கத்தா, 362, பர்வாலா, 327, டில்லி, 351.

இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டது. நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 68 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், அதன் விலை கிலோ, 54 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது.

## தொழில் நுட்ப பயிற்சி

**விருதுநகர்:** விருதுநகர் செந்திக்குமார நாடார் கல்லூரியில், தமிழ்நாடு மாநில அறிவியல் தொழில் நுட்ப மன்ற நிதி உதவியில், மாவட்டத்திற்கான "அஸ்ட்ரா' என்ற அறிவியல் தொழில் நுட்ப வகுப்பு துவக்க விழா, முதல் பயிற்சி வகுப்பு நடந்தது. விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த மகளிர் சுய<உதவிக்கு உறுப்பினர்கள், மாணவர்கள் பயிற்சி பெற்றனர். துவக்க விழாவில், கல்லூரி டீன் சாமி வரவேற்றார். முதல்வர் சுந்தரபாண்டியன், இயக்குனர் அசோக்குமார், அருப்புக்கோட்டை தனிதாசில்தார் மங்களநாதன் பேசினர். மற்றொரு டீன் கதிர்வளவக் குமார் நன்றி கூறினார். பின்னர் நடந்த பயிற்சி வகுப்பில், "தேனி வளர்ப்பு' குறித்த பயிற்சியை, அம்பாசமுத்திரம் நெல் ஆராய்ச்சி மைய பேராசிரியர் இளஞ்செழியன் வழங்கினார். செந்திக்குமார நாடார் கல்லூரி பேராசிரியர் ஜெயக்குமரன், "சூரிய சக்தி கருவிகள் பயன்பாடு' குறித்த பயிற்சி வழங்கினார். ஏற்பாடுகளை, அஸ்ட்ரா விருதுநகர்மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் பிரிதிவிகுமரன் செய்தார்.

## பிள்ளையார்நத்தத்தில் காட்டு பன்றிகள்

**ஸ்ரீவில்லிபுத்தூர்:**பிள்ளையார்நத்தம் பகுதி விவசாய நிலங்களில் பன்றிகள் புகுந்து, தண்ணீர் குழாய்களை சேதப்படுத்துவதால், விவசாயிகள் பாதிக்கின்றனர்.

ஸ்ரீவில்லிபுத்தூர் வனப்பகுதியை யொட்டிய பிள்ளையார்நத்தம் பகுதி விவசாயிகள், அதிகளவில் வெங்காயம், வேர் கடலை, தக்காளி பயிர் செய்கின்றனர். சரி வர மழை பெய்யாததால், கண்மாய்கள் வறண்டு, நிலத்தடி நீர் மட்டமும் குறைந்து, பெரும்பான்மை போர்வெல்களில் தண்ணீர் இல்லாத நிலை உள்ளது. இப்பகுதி விவசாயிகள் , விளை பொருட்களை விளைவிக்க, விலை கொடுத்து தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர். சில போர்வெல்களில் மட்டுமே, தண்ணீர் இருந்து வருகிறது. இந்த தண்ணீரை கொண்டு விவசாய பயிர்களை காப்பாற்றி வரும் வேளையில், ஸ்ரீவில்லிபுத்தூர் வனப்பகுதியிலிருந்து, உணவு, தண்ணீருக்காக வெளியேறும் மான், காட்டு பன்றிகள், பைப்களை  உடைத்து சேதப்படுத்துவதோடு, பயிர்களையும் நாசம் செய்கிறது.
அய்யனார்,"" ஏற்கனவே தண்ணீர் இல்லாமல் , பயிரை காப்பாற்ற முடியாமல் திண்டாடி வரும் நிலையில், காட்டு பன்றிகள் தண்ணீர் குழாய்களை சேதப்படுத்துவதால் ,மிகுந்த நஷ்டம் ஏற்பட்டு வருகிறது. காட்டு பன்றிகளை வன விலங்குகள் பட்டியலில் இருந்து அகற்ற வேண்டும். அவ்வாறு செய்தால்தான், விவசாயிகளை காப்பாற்ற முடியும் ," என்றார்.

### விளைச்சல் உண்டு விலை இல்லை

**ராஜபாளையம்:**தக்காளி விலை குறைந்ததால், ராஜபாளையம் கிராம விவசாயிகள் கவலையில் உள்ளனர். நவீன கிட்டங்கி மற்றும் இழப்பீடை எதிர்பார்க்கின்றனர். ராஜபாளையம் அருகே சங்கரலிங்காபுரம் உட்பட சுற்று கிராமங்களில், 30 ஏக்கருக்கு மேல் தக்காளி விவசாயம் நடந்தது.பருவமழை பெய்யாததால், கண்மாய்களில் தண்ணீர் இல்லை. கிணறுகளிலும் நீர்மட்டம் குறைந்தது. செடிகளை காப்பாற்ற, தண்ணீரை விலைக்கு வாங்கி பாய்ச்சினர்.எதிர்பார்த்ததை விட, நல்ல விளைச்சல் இருந்தும், விலை கிடைக்கவில்லை. நேற்று காலை ராஜபாளையம் தனியார் மார்க்கெட்டில், கிலோ ரூ.1.50 க்கு விற்கப்பட்ட தக்காளி,மாலையில், ஒரு ரூபாய்க்கு விற்கப்பட்டது. உழைப்பு மற்றும் செலவை ஈடுகட்ட முடியாமல், தக்காளி விவசாயிகள் சிரமப்படுகின்றனர். விவசாயி பொன்னுச்சாமி, ""தண்ணீரை விலைக்கு வாங்கி, விவசாயம் செய்தோம். தண்ணீர்

பாய்ச்ச ஒரு மணிநேரத்திற்கு, 500 ரூபாய் செலவானது. செடிகளை காப்பாற்றவேண்டும் என்ற நோக்கத்தில், செலவு செய்தோம். விளைச்சல் கிடைத்தது. விலை கிடைக்காததால், கண்ணீர் வடிக்கிறோம். காய்கறிகளை பாதுகாக்கும் நவீன கிட்டங்கி, இழப்பீடு கிடைக்க, தமிழக அரசு ஏற்பாடு செய்யவேண்டும்," என்றார்.

### ஆற்றோரங்களை அகலப்படுத்தும் பணிக்கு விவசாயிகள் வரவேற்பு

**பந்தலூர்** : பந்தலூர் பகுதியில் நடக்கும் ஆற்றோர பகுதிகளை அகலப்படுத்தும் பணிக்கு விவசாயிகள் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.பந்தலூர் பகுதியில் பாயும் ஆறுகள், நீரோடைகளை பலரும் ஆக்கிரமித்து தேயிலை, காபி, பாக்கு, நேந்திரன் வாழை விவசாயம் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் நீரோடைகள், ஆறுகளின் அகலம் குறைந்து மழை காலங்களில் மழைவெள்ளம் கிராமங்களுக்குள் புகுந்து பல்வேறு அசம்பாவிதங்களை ஏற்படுத்தி வந்தது. இந்நிலையில், மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வேளாண்மை பொறியியல் துறை மூலம் கடந்த சில ஆண்டுகளாக ஒவ்வொரு பகுதியிலும் நீரோடை ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் அம்பலமூலா நீர் பிடிப்பு பகுதிக்கு உட்பட்ட பொன்னானி ஆற்றில், 1000 மீட்டர் நீளமும், சாலியாறு நீர்ப்பிடிப்பு பகுதிக்கு உட்பட்ட விளக்கலாடி ஆற்றில், 3000 மீட்டர் நீளத்தையும், 12 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அகலப்படுத்தி சீரமைக்கும் பணி நடந்து வருகிறது. இப்பணிகள் முழுமை பெற்றால், மழை காலத்தில் சிக்கல் இருக்க வாய்ப்பில்லை.விவசாயிகள் கூறுகையில்,"தற்போது அகலப்படுத்தப்பட்ட நீரோடைகளின் இரு பக்கங்களிலும் மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் மூலமே மரங்கன்றுகளை நடவு செய்தால், மண்ணரிப்பு கட்டுப்படுத்தப்படும். இதேபோல, பந்தலூரின் பிற இடங்களிலும் ஆக்கிமிப்புகளை அகற்றி, ஆறுகளை தூர் வார நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றனர்.

## வரத்து அதிகரிப்பால்மிளகாய் விலை வீழ்ச்சி

**பழநி:**வெளிமாவட்ட மிளகாய்வரத்து அதிகரிப்பு காரணமாக, விலை வீழ்ச்சியடைந்துள்ளதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். இரண்டு மாதத்திற்கு முன், பச்சைமிளகாய் கிலோ ரூ.20 முதல் 30 வரை விற்கப்பட்டது. தற்போது, வெளியூர் குண்டு, சம்பா மிளகாய் வரத்து அதிகரிப்பு காரணமாக, உள்ளூர் மிளகாய் விலை குறைந்துள்ளது. சந்தையில் சம்பா மிளகாய் கிலோ ரூ.10 முதல் ரூ.12 வரையும், குண்டுமிளகாய் கிலோ ரூ.16 க்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதைப்போலவே, சம்பா மிளகாய் வத்தல் கிலோவுக்கு ரூ.10 விலை குறைந்து, கிலோ ஒன்று ரூ.75 க்கு விற்கப்படுகிறது. ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில், வெளிமாவட்ட மிளகாய் வரத்து காரணமாக, உள்ளூர் விவசாயிகள் பாதிக்கபட்டுள்ளனர். பழநி வட்டாரத்தில் மிளகாய்களை பறிக்காமல் செடியிலேயே விடப்பட்டுள்ளது.விவசாயி சீனிவாசன் கூறுகையில், ""ஐந்து ஏக்கர் பரப்பளவில் மிளகாய் சாகுபடி செய்துள்ளோம். தண்ணீர் விலைக்குவாங்கி ஊற்றிவளர்த்தோம். வெளிமாவட்ட மிளகாய் வரத்து, அதிகரிப்பு காரணமாக, உள்ளூர் மிளாகாய்க்கு எதிர்பார்த்த விலை கிடைக்கவில்லை. அதனால் பறிக்காமல் செடியிலேயே விட்டுள்ளோம்," என்றார்.

## அதிகரிப்பு

**திண்டுக்கல்:**வெளி மாநிலங்களில் இருந்து தேவைக்கேற்ப மூடைகள் அதிக அளவில் தமிழகத்திற்கு லாரிகளில் வரத்துவங்கியிருப்பதால், அரிசி விலையில் மாற்றமில்லாத நிலை நீடிக்கிறது.தமிழகத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக மழை பெய்யாததால் நெல் விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், ஆந்திரா, கர்நாடகாவிலிருந்து அரிசி மூடைகளை அதிக அளவில் கொள்முதல் செய்யும் நிலை ஏற்பட்டது.

இதற்கிடையில் அரிசிக்கு மத்திய அரசு சேவை வரி விதித்திருந்ததால், மூடைக்கு ரூ. 150 வரை விலை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.இந்நிலையில், சேவை வரி வாபஸ் பெறப்பட்டதால் அரிசி விலை உயர்வு தவிர்க்கப்பட்டுள்ளது. வெளி மாநிலங்களில் இருந்து அரிசி மூடைகள் அதிக அளவில் வரத்துவங்கியுள்ளது. தமிழகத்தில் ஐ.ஆர். 20 ரகம் 100 கிலோ மூடை தற்போது ரூ.2,500 க்கு

விற்கப்படுகிறது. இட்லி அரிசி மூடை ரூ.2,500 ல் இருந்து 2,600 வரை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழக பொன்னி அரிசி மூடை ரூ.3,200 க்கு விற்பனையாகிறது.கர்நாடகாவிலிருந்து வரவழைக்கப்படும் பொன்னி அரிசி மூடை(புதியது) ரூ. 3000 ல் இருந்து ரூ. 3.300 வரை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒரு ஆண்டு இருப்பு வைக்கப்பட்ட கர்நாடகா பொன்னி அரிசி மூடை(பழசு) ரூ.3,500 ல் இருந்து ரூ.3800 வரை விற்பனை செய்யப்படுகிறது. கர்நாடகா பச்சரிசி(பழசு) ஒரு மூடை ரூ.3,500 க்கு விற்கப்படுகிறது. பிரியாணி அரிசி மூடை ரூ.6,500 என விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.மொத்த வியாபாரிகள் கூறுகையில்,"தமிழகத்தில் நெல் விளைச்சல் இல்லாததால் வெளிமாநில அரிசியைத்தான் நம்பவேண்டியுள்ளது. சேவை வரி ரத்து செய்யப்பட்டாலும், தமிழகத்தில் தேவைக்கேற்ப அரிசி இல்லாததால் விலையில் மாற்றமில்லாத நிலை நீடிக்கிறது,' என்றனர்.

## வீடியோ கான்பரன்சிங் மூலம் தேசிய வேளாண் கண்காட்சி

**திருவண்ணாமலை:** செய்யாறு அருகே வீடியோ கான்பரன்சிங் மூலம் தேசிய வேளாண் கண்காட்சி நடந்தது.

செய்யாறு வட்டாரம் வேளாண்மை துறை சார்பில், 2013-14ம் ஆண்டு ஆத்மா திட்டத்தின் கீழ் தேசிய வேளாண் கண்காட்சி மத்திய பிரதேச மாநிலம் நாக்பூரில் நடந்து வருகிறது. இக்கண்காட்சியில், திருவண்ணாமலை மாவட்டம் சார்பில், 179 விவசாயிகள் பங்கேற்றுள்ளனர். இந்நிலையில், நாக்பூரில் நடக்கும் கண்காட்சியினை மற்ற விவசாயிகள் கண்டு பயன்பெறும் வகையில், செய்யாறு பி.டி.ஓ. அலுவலகத்தில், வீடியோ கான்பரன்சிங் மூலம் நேரடி ஒளிபரப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த விழா, நேற்று முன்தினம் மாலை நடந்தது. நிகழ்ச்சிக்கு, வேளாண்மை உதவி இயக்குனர் சாந்தி, பி.டி.ஓ., கார்த்திகேயன், ஆறுமுகம் உள்பட பலர் பங்கேற்றனர். நாக்பூரில் நடந்த தேசிய வேளாண் கண்காட்சி குறித்தும், நவீன வேளாண் தொழில்நுட்பம் குறித்தும்,

விவசாயிகளுக்கு, அதிகாரிகள் எடுத்து கூறினார். இதில், நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பழநி பகுதியில் பயிர்களில்?மாவு பூச்சி தாக்குதல் அதிகரிப்பு கட்டுப்படுத்த வேளாண்துறை ஆலோசனை**

பழநி,: பழநி பகுதியில் சிறு தானிய பயிர்களை தாக்கும் மாவு பூச்சிகளை கட்டுப்படுத்தும் முறை குறித்து வேளாண்துறை அலுவலர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

பழநி வட்டத்தில் நெல், கரும்பு, சிறு தானியங்கள், பருத்தி பயிர்கள், தோட்டக்கலை பயிர்கள் அதிகளவில் பயிரிடப்பட்டு வருகிறது. இப்பயிர்களில் தற்போது மாவு பூச்சிகள் தென்படுகின்றன. இவ்வகை பூச்சிகளின் தாக்குதலை கட்டுப்படுத்த, வயலைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

மேலும், கிரிப்டோளமஸ் பொறி வண்டுகளை ஏக்கருக்கு 600 எண்கள் வீதம் பயன்படுத்தலாம். 5% வேப்பங்கொட்டை கரைசலை, ஒட்டும் திரவத்துடன் கலந்து பயன்படுத்த வேண்டும். மேலும், ரசாயன மருந்துகளான புரபனோபஸ் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 5 மில்லி, இமிடா குளேபிரிட் 0.5 மில்லி, தயோ மீத்தாக்சான் ஒரு கிராம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை பயன்படுத்தலாம்.

மருந்து தெளிக்கும் போது ஒட்டும் திரவத்தை பயன்படுத்த வேண்டும். மருந்தை சுழற்சி முறையில் பயன்டுத்துவதே சிறந்தது. இம்முறையை விவசாயிகள் கடைபிடிக்கும்போது பயிர்களில் மாவு பூச்சிகளின் தாக்குதல் குறையும் என வேளாண்துறை அலுவலர்கள் கூறியுள்ளனர்.

**மேற்குத்தொடர்ச்சி மலை பகுதியில் காய்த்து குலுங்கும் மலை ஆரஞ்சுகள்**

திருவில்லிபுத்தூர்**, :** திருவில்லிபுத்தூர் அருகே உள்ள செண்பகத்தோப்பு மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் அமைந்துள்ளது. இங்கு வானுயர்ந்த மரங்களும், மூலிகை செடிகளும் ஏராளமாக உள்ளன.

மிகவும் அடர்த்தி மிகுந்த இந்த வனப்பகுதியில் தெரிந்தும் தெரியாமலும் ஆயிரக்கணக்கான மரங்கள் உள்ளன. இந்த பகுதியில் குறிப்பிட்ட சில இடங்களில் பல்வேறு ரக காளான்களும்,அழகிய பூக்களும் பல வகையான பழங்களும் அவ்வப்போது காய்த்து குலுங்கும்.

அந்த வகையில் மழையின்றி வறட்சியான இந்த நேரத்தில் மேற்குத்தொடர்ச்சி மலையின் உச்சிப்பகுதியில் ஏராளமான மலை ஆரஞ்சுகள் காய்த்து குலுங்குகின்றன. முதலியார் ஊத்துப்பகுதியில் ஏராள மான மரங்களில் மலை ஆரஞ்சுகள் காய்த்துள்ளன. இதைப்பார்த்து வனத்துறையினர் மற்றும் உடன்சென்ற மலை வாழ்மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

மலை உச்சிப்பகுதியான இப்பகுதியில் யானைகள், புலிகள், சிறுத்தைகள், வெள்ளைமந்தி, கருமந்தி, சிங்கவால் குரங்கு எனப் பல்வேறு வகையான வனவிலங்குகள் வசித்து வருகின்றன.

காய்த்துள்ள மலை ஆரஞ்சுகளை கருமந்தி, வெள்ளைமந்தி உள்ளிட்ட

விலங்குகளும் குறிப்பிட்ட சில பறவைகள் உண்டது போக கீழே விழுந்து கிடக்கின்றன.

இதுகுறித்து மலைவாழ் மக்கள் கூறுகையில், தற்போது போதிய மழையின்றி இந்த பகுதியில் வறட்சியான சூழ்நிலை உள்ளது. இந்த நேரத்தில் சில ஆண்டுகளுக்கு பிறகு இந்த ஆண்டு மலை ஆரஞ்சு காய்த்து குலுங்குவது சந்தோசமாக உள் ளது. ஆரஞ்சோடு ஒரு சில இடங்களில் மாதுளைகளும் ஓரளவு காய்த்துள்ளன என்று தெரிவித்தனர்.

**நடமாடும் கொள்முதல் நிலையங்கள்**

கடலூர்**, :** கடலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் மூலம் நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த ஆண்டு எதிர்பார்த்த அளவிற்கு நெல் கொள்முதல் நடைபெறவில்லை. தனியார் வியாபாரிகள் அறுவடை செய்யும் இடத்திற்கே சென்று நெல் கொள்முதல் செய்து வருகின்றனர்.

இந்நிலையில், நெல் கொள்முதலை அதிகரிக்க நடமாடும் நேரடி கொள்முதல் நிலையங்கள் மூலம் விவசாயிகளின் கிராமத்திற்கே சென்று நெல்கொள்முதல் செய்யப்படும் என மாவட்ட ஆட்சியர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

கடலூர் மாவட்டத்தில் சம்பா பருவத்தில் 98.421 ஹெக்டேர் பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பெரும்பாலான பகுதிகளில் நெல் அறுவடை பணி நடைபெற்று வருகிறது. அறுவடை செய்யப்பட்ட நெல்லை கொள்முதல் செய்ய ஏதுவாக கடலூர் மாவடடத்தில் ஏற்கனவே 151 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தமிழ்நாடு நுகர்பொருளர் வாணிப கழகத்தின் மூலம் திறக்கப்பட்டு நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக விவசாயிகள் பயனடையும் வகையில் டெல்டா பாசன பகுதிகளான

பரங்கிப்பேட்டை, புவனகிரி, கீரப்பாளையம், காட்டுமன்னார்கோவில் மற்றும் குமராட்சி வட்டங்களில் நடமாடும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் மூலம் செயல்படுத்தப்பட உள்ளன. இதன்படி ஒரே கிராமத்தில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட விவசாயிகளிடமிருந்து அறுவடை செய்து தயார் நிலையில் உள்ள குறைந்த பட்சம் 300 நெல் மூட்டைகள்(40 கிலோ கொள்ளளவு) உள்ள இடங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் மூலம் நேரடியாக கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.எனவே, விவசாயிகள் தங்கள் கிராமத்தில் அறுவடை செய்து தயார் நிலையில் உள்ள நெல் இருப்பு விவரத்தை அருகாமையில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் தெரிவித்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**எதிர்வரும் 2014–15 பருவத்தில் கோதுமை, அரிசி, மக்காச்சோளம் ஏற்றுமதி 29 சதவீதம் குறையும்**



**புதுடெல்லி,**

எதிர்வரும் 2014–15 சந்தைப் பருவத்தில் கோதுமை, அரிசி, மக்காச்சோளம் ஏற்றுமதி 29 சதவீதம் சரிவடைந்து 1.35 கோடி டன்னாக குறையும் என்றும், நடப்பு

பருவத்தில் இந்த மூன்று விளைபொருள்களின் ஏற்றுமதி 1.90 கோடி டன்னாக இருக்கும் என்றும் அமெரிக்க வேளாண் துறை முன்னறிவிப்பு செய்துள்ளது.

**சந்தைப் பருவங்கள்**

கோதுமை சந்தைப் பருவம் ஏப்ரலில் தொடங்கி மார்ச் மாதத்தில் நிறைவடைகிறது. நெல் சந்தைப் பருவம் அக்டோபரில் தொடங்கி செப்டம்பர் மாதத்திலும், மக்காச்சோளம் சந்தைப் பருவம் நவம்பரில் தொடங்கி அக்டோபர் மாதத்திலும் நிறைவடைகிறது. சர்வதேச சந்தையில் இந்த மூன்று விளைபொருள்களின் விலை குறைந்து வருவதால் ஏற்றுமதியில் அதிக லாபம் இருக்காது. எனவே ஏற்றுமதி குறையும் என அமெரிக்க வேளாண் துறை தெரிவித்துள்ளது.

எதிர்வரும் புதிய பருவங்களில் 80 லட்சம் டன் அரிசியும், 30 லட்சம் டன் கோதுமையும், 25 லட்சம் டன் மக்காச்சோளமும் ஏற்றுமதியாகும். 30 லட்சம் டன் கோதுமையில் பெரும் பகுதி தனியாராலும், ஓரளவு அரசு நிறுவனங்களாலும் ஏற்றுமதி செய்யப்படும் என அமெரிக்க அமைப்பு மதிப்பீடு செய்துள்ளது. 2013 ஆகஸ்டு மாதத்தில் ஏற்றுமதிக்காக 20 லட்சம் டன் கோதுமையை ஒதுக்கீடு செய்வதாக மத்திய அரசு அறிவித்தது. இதில் ஒரு பகுதி அடுத்த பருவத்தில் ஏற்றுமதியாகும் என இவ்வமைப்பு எதிர்பார்க்கிறது.

நடப்பு பருவத்தில் (2013 அக்டோபர் – 2014 செப்டம்பர்) ஒரு கோடி டன் அரிசி (பாசுமதி + சாதாரண ரகம்) ஏற்றுமதியாகும் என்றும், அடுத்த பருவத்தில் ஏற்றுமதி 80 லட்சம் டன்னாக குறையும் என்றும் அமெரிக்க வேளாண் துறை கருதுகிறது. மக்காச்சோளத்தை பொறுத்தவரை ஏற்றுமதி 30 லட்சம் டன்னிலிருந்து 25 லட்சம் டன்னாக குறையும் என இத்துறை கணித்துள்ளது. உள்நாட்டில் தேவைப்பாடு அதிகரிக்க உள்ளதே இதன் பின்னணியாக இருக்கும். கோழிப்பண்ணைகளில் பிரதான தீவனமாக மக்காச்சோளம் பயன்படுத்தப்படுகிறது.

**உற்பத்தி மதிப்பீடு**

2014 ஜூன் மாதத்துடன் நிறைவடைய உள்ள வேளாண் பருவத்தில் அரிசி உற்பத்தி 1.03 கோடி டன்னாகவும், கோதுமை விளைச்சல் 9.25 கோடி டன்னாகவும் இருக்கும் என அமெரிக்க வேளாண் துறை மதிப்பீடு செய்துள்ளது.

**உணவு பதப்படுத்துதல் துறையில் 66 லட்சம் பேர் பாராளுமன்றத்தில் தகவல்**



**புதுடெல்லி,**

உணவு பதப்படுத்துதல் துறையில் சுமார் 66 லட்சம் பேர் ஈடுபட்டுள்ளதாக பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. மத்திய புள்ளியியல் அலுவலகத்தின் 2011–12–ஆம் நிதி ஆண்டுக்கான ஆய்வறிக்கை ஒன்றை சுட்டிக்காட்டி, பதிவு பெற்ற பதப்படுத்தும் பிரிவுகளில் 18 லட்சம் பேரும், பதிவு செய்யப்படாத பிரிவுகளில் 48 லட்சம் பேரும் பணியாற்றுவதாக பாராளுமன்ற மக்களவையில் உணவு பதப்படுத்துதல் துறைக்கான மத்திய இணை அமைச்சர் சரண் தாஸ் மகந்த் கூறினார்.

2010–11–ஆம் நிதி ஆண்டில் உணவு பதப்படுத்துதல் துறையில் மொத்தம் 16.62 லட்சம் பேர் பணியாற்றினர். இதில் நேரடி வேலைவாய்ப்பு பெற்றவர்களின் எண்ணிக்கை 9.03 லட்சமாகும். நேரடி வேலைவாய்ப்பு பெற்றவர்களில் 2.59 லட்சம் பேர் பெண்களாகவும், 6.44 லட்சம் பேர் ஆண்களாகவும் இருந்தனர். அதே ஆண்டில் பதிவு பெறாத உணவு பதப்படுத்தும் பிரிவுகளில் 47.90 லட்சம் பணியாளர்கள் இருந்தனர். இவர்களில் 11.90 லட்சம் பேர் பெண்களாகவும், 36 லட்சம் பேர் ஆண்களாகவும் இருந்தனர்.

நம் நாட்டில் உற்பத்தியாகும் உணவு தானியங்கள், காய்கறி, பழங்கள், இறைச்சி, பால் மற்றும் பிற வேளாண் விளைபொருள்களுடன் ஒப்பிடும்போது பதப்படுத்தும் அளவு மிகவும் குறைவாக உள்ளது.

**நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 10 காசுகள் உயர்வு**



**நாமக்கல், -**

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை நேற்று ஒரே நாளில் 10 காசுகள் உயர்ந்து 320 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது.

முட்டை விலை உயர்வு

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை கடந்த சில நாட்களாக 310 காசுகளாக நீடித்துவந்தது. இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டை கொள்முதல் விலையை மேலும் 10 காசுகள் உயர்த்த முடிவு செய்தனர். எனவே முட்டை கொள் முதல் விலை 320 காசுகளாக உயர்ந்து உள்ளது.

பிறமண்டலம்

பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:- சென்னை-345, ஐதராபாத்-310, விஜயவாடா, தனுகு- 310, பார்வாலா-327, மும்பை- 348, மைசூர்-337, பெங்களூர்-335, கொல்கத்தா-362, டெல்லி-351. கறிக்கோழி கிலோ ரூ.66-க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது.

நேற்று பல்லடத்தில் நடந்த கறிக்கோழி ஒருங்கி ணைப்பு குழு கூட்டத்தில் கிலோவுக்கு ரூ.2 உயர்த்த முடிவு செய்தனர். எனவே கறிக்கோழி விலை கிலோ ரூ.68 ஆக உயர்ந்து உள்ளது.

முட்டைக்கோழி கிலோ ரூ.54-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதன் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை. பிற மண்டலங்களில் முட்டை விலை உயர்ந்து வருகிறது. அதற்கு தகுந்தாற்போல் நாமக்கல் மண்டலத்திலும் விலை உயர்த்தப்பட்டு உள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

மேலும் தமிழகம் மற்றும் கேரளாவில் விற்பனை சற்று உயர்ந்து இருப்பதும், விலை உயர்வுக்கு ஒரு காரணம் என கூறப்படுகிறது.

**கொடுமுடியில் தேசிய வேளாண் கருத்தரங்கு**



**ஊஞ்சலூர்,**

கொடுமுடி வட்டார வேளாண்மை துறையின் சார்பில் மேம்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டு திட்டம் பற்றிய கருத்தரங்கம் வட்டார வேளாண்மை விரிவாக்க மைய அலுவலகத்தில் நடைபெற்றது.

கருத்தரங்கிற்கு வேளாண்மை உதவி இயக்குனர் ரா.சாவித்திரி தலைமை தாங்கினார். எஸ்.பிரகாசம், எஸ்.அர்ச்சுன சிவகுமார் ஆகியோர் கலந்து கொண்டு, எள், கடலை, கரும்பு, வாழை, குச்சிக்கிழங்கு ஆகிய பயிர் வகைகளை காப்பீடு செய்யும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கி கூறினார்கள்.

கருத்தரங்கில் 50–க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். முடிவில் வேளாண்மை அதிகாரி முருகேசன் நன்றி கூறினார்.

**தமிழகத்திலேயே அதிகபட்சமாக கோவை மாவட்டத்தில் ரூ.10 ஆயிரம் கோடி வங்கிக் கடன் வழங்க இலக்கு**



**கோவை,**

தமிழகத்திலேயே அதிகபட்சமாக கோவை மாவட்டத்தில்ரூ.10ஆயிரம் கோடி வங்கிக் கடன் வழங்கும் திட்ட அறிக்கையை கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டார். திட்ட அறிக்கை கோவை மாவட்டத்தில் 2014–2015–ம் ஆண்டுக்கான கடன் திட்ட அறிக்கை வெளியீட்டு நிகழ்ச்சி கலெக்டர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்டரங்கில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் கலந்து கொண்டு திட்ட அறிக்கையை வெளியிட்டார். முதல் பிரதியை சென்னை ரிசர்வ் வங்கி உதவி பொது மேலாளர் ஆர்.எல்.ராஜாராம் பெற்றுக் கொண்டார். இந்த திட்ட அறிக்கை யின் விவரம் வருமாறு:–

**<u>அதிகபட்சம்</u>**

2014–15–ம் ஆண்டில் தமிழகத்திலேயே கோவை மாவட்டத்தில் மிகவும் அதிகபட்சமாக ரூ.10,226 கோடி வங்கி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்த 2013–14–ம் ஆண்டு ரூ.8433 கோடி வங்கி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. தற்போது 2014–15–ம் ஆண்டில் அதை காட்டிலும் ரூ.1793 கோடி கூடுதலாக சேர்த்து ரூ.10,266 கோடி வங்கிக் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**<u>திட்ட அறிக்கை</u>**

2014–15–ம் ஆண்டிற்கான வருடாந்திர கடன் திட்டமானது நபார்டு வங்கி தயாரித்த 2014–15–ம் வருடத்திற்கான உத்தேச கடன் இலக்கு, 2013–14–ம் ஆண்டில் கோவை மாவட்டத்தில் அனைத்து வங்கிகளிலும் கடன் வழங்கிய செயல்பாடு, பல்வேறு அரசு மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் திட்டங்களை உள்ளடக்கி இந்த வருடாந்திர கடன் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

**கடன் வழங்க இலக்கு**

2014–15–ம் ஆண்டில் விவசாயத்திற்கு ரூ.4336 கோடியும், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்காக ரூ.4168 கோடியும், இன்னும் பிற முன்னுரிமை கடன்களுக்கு ரூ.1722 கோடியும் மொத்தம் ரூ.10,226 கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2014–15–ம் ஆண்டு வருடாந்திர கடன் வழங்கும் திட்டத்தில் விவசாயம், சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்கள் உள்ளிட்ட இன்னும் பிற முன்னுரிமை தொழில்களுக்கு கடன்கள் வழங்கப்படும் என்பது உள்ளிட்ட பல்வேறு விவரங்கள் அதில் இடம் பெற்றுள்ளது.

**யார்–யார்?**

நிகழ்ச்சியில் கோவை மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் கே.கிருஷ்‘ணமூர்த்தி, கனரா வங்கி பொது மேலாளர் யு.ரமேஷ்‘குமார், மற்றும் பாரத ஸ்டட் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, இந்தியன் வங்கி ஆகிய வங்கிகளின் செயல் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**தேயிலை செடிகளில் சிவப்பு சிலந்தி நோய் தாக்குதல் அதிகரிப்பு விவசாயிகள் கவலை**



மஞ்சூர் அருகே உள்ள தேயிலை தோட்டங்களில் தற்போது சிவப்பு சிலந்தி நோய் தாக்குதல் அதிகரித்து உள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.

ஏமாற்றிய பருவ மழை

நீலகிரி மாவட்டத்தில் இந்த ஆண்டு வடகிழக்கு பருவ மழை எதிர்பார்த்த அளவு பெய்யவில்லை. அவ்வப்போது லேசான தூறல் மழையுடன் வடகிழக்கு பருவமழை பெய்து விட்டு நின்று விட்டது. இத னால் மாவட்டத்தில் உள்ள நீர் நிலைகள் வறண்டு காணப் படுகின்றன.

மழை பொய்த்து போனதால் மாவட்டத்தில் உள்ள அணை களில் நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. மேலும் நீலகிரி மாவட்டத்தில் மழை வேண்டி ஆங்காங்கே மக்கள் சிறப்பு பூஜைகளும் செய்து வருகிறார்கள்.

சிவப்பு சிலந்தி நோய் தாக்குதல் அதிகரிப்பு

இந்த ஆண்டு போதிய அளவு பருவமழை பெய்யாத தால் மஞ்சூர், பெங்கால் மட்டம், இத்தலார், எமரால்டு, மேல்குந்தா, தாய் சோலை உள்பட பல்வேறு பகுதிகளில் உள்ள தேயிலை தோட்டங்களில் சிவப்பு சிலந்தி நோய் தாக்குதல் தற்போது அதிகரித்து உள்ளது. இதனால் தேயிலை செடிகளில் எடை குறைவு ஏற்பட்டு உள்ளது.

சிவப்பு சிலந்தி நோய் தாக்குதல் காரணமாக விவசாயிகள் பொருளாதார ரீதி யாக பாதிக்கப்பட்டு உள்ள னர். மேலும், இந்த நோய் மற்ற தேயிலை தோட்டங்களுக்கும் பரவும் அபாயம் ஏற்பட்டு உள்ளதாக விவசாயிகள் தெரிவித்து உள்ளனர்.

கிருமி நாசினி

இதுகுறித்து மஞ்சூர் விவசாயிகள் சிலர் கூறியதாவது:-

மஞ்சூர் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் போதிய அளவு பருவமழை பெய்யாததால் தற்போது தேயிலை தோட்டங்களில் சிவப்பு சிலந்தி நோயின் தாக்கம் அதிகரித்து உள்ளது.

பச்சை தேயிலைக்கு போதிய விலை கிடைக்காததால் விவசாயிகள் கவலை அடைந்து வரும் நிலையில் தற்போது சிவப்பு சிலந்தி நோய் தாக்குல் அதிகரித்து உள்ளதால் விவ சாயிகள் பொருளாதார ரீதி யாக பாதிக்கப்பட்டு உள்ளனர். எனவே, விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு தேயிலை வாரியம் 100 சதவீத மானியத்தில் சிவப்பு சிலந்தி நோய் கிருமி நாசினியை விவ சாயிகளுக்கு வழங்க வேண் டும்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**ஊட்டி மரவியல் பூங்காவில் 10 ஆயிரம் மலர் செடிகள் நடவு செய்யும் பணி மும்முரம்**



ஊட்டி மரவியல் பூங்காவில் 10 ஆயிரம் மலர்செடிகள் நடவு செய்யும் பணி மும்முரமாக நடை பெற்று வருகிறது.

<u>மரவியல் பூங்கா</u>

ஊட்டி மான் பூங்காவிற்கு செல்லும் வழியில் மரவியல் பூங்கா உள்ளது. ஆரம்ப காலத்தில் பராமரிப்பு இன்றி இந்த பூங்கா பாழடைந்து காணப்பட்டது. இதனை தொடர்ந்து கடந்த 2007-ம் ஆண்டு மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.12 லட்சம் செலவில் இந்த பூங்கா சீரமைக்கப்பட்டது.

பின்னர் இங்கு அழகிய புல் வெளியும், அதன் நடுவில் நடைபாதையும் அமைக்கப்பட்டது. இதுதவிர இமயமலை பகுதியில் இருந்து கொண்டு வரப்பட்ட ஏராளமான மரக் கன்றுகள் இங்கு நடவு செய்யப் பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் கிரிக்கெட் தயாரிக்க பயன்படும் வில்லோ மரங்களும் இங்கு உள்ளன.

கோடை சீசன்

ஊட்டியில் வருகிற ஏப்ரல், மே மாதங்களில் கோடைசீசன் நிலவும். இந்த சீசன் காலங்களில் ஊட்டிக்கு லட்சக்கணக்கான சுற்றுலா பயணிகள் வருகின்றனர். இவர்களை மகிழ் விக்க ஊட்டி அரசு தாவரவியல் பூங்கா, மரவியல் பூங்கா, குன்னூர் சிம்ஸ் பூங்கா உள்ளிட்ட பூங்காக்களில் மலர் செடிகள் நடவு செய்யப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் ஊட்டி மரவியல் பூங்காவில் மலர் செடிகள் நடவு செய்யும் பணி தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. இந்த ஆண்டு கோடை சீசனுக்காக பல்வேறு வகைகளை சேர்ந்த சுமார் 10 ஆயிரம் மலர் செடிகள் நடவு செய்ய பூங்கா அதிகாரிகள் திட்டமிட்டு உள்ளனர்.

பிரெஞ்ச் மேரி கோல்டு

மரவியல் பூங்காவில் தற்போது பிரெஞ்ச் மேரி கோல்டு, இன்கா மேரிகோல்டு, பேன்சி உள்ளிட்ட மலர் செடிகள் நடவு செய்யப்பட்டு உள்ளன. இதுதவிர சால்வியா, பென் சிடிமன், ஆப்ரிகன் மேரி கோல்டு, கேலண்டுலா, அன்டி ரைனம், பெட்டூனியா, பேன்சி ஆஸ்டர், கார்னேசன், டையான்தஸ், கலிபோர்னியா பாப்பி, ஸ்வீட் லில்லியம், கோச்சியா, சன்பிளவர், லேடிஸ் லேஸ், சப்னேரியா, கோடி ஷியா, அஜிரேட்டம், ஹெலி ஹீரைசம், ஜீனியா சிலோசியா, அமா ரன்தஸ், ஸ்டாக்ஸ் உள்ளிட்ட மலர்செடிகளின் நாற்றுக்கள் நடவு செய்யப்பட உள்ளன.

நடவு செய்யப்பட்ட மலர் செடிகளில் ஏப்ரல் மாதம் கடைசி வாரத்தில் பூக்கள் பூக்க தொடங்கும். மேலும் மே மாதத்தில் மலர் செடிகள் முழு வதும் பூத்து குலுங்கி பூங்கா முழுவதும் வண்ண மயமாக காட்சி அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**வலங்கைமானில் நீர்மூழ்கி தடுப்பணைகள் அமைக்கும் பணி கலெக்டர் நடராசன் பார்வையிட்டார்**



**வலங்கைமான்,**

வலங்கைமான் பகுதிகளில் ஆற்றுக்குள் தரைக்கு அடியில் நீர்மூழ்கி தடுப்பணைகள் அமைக்கும் பணிகளை திருவாரூர் கலெக்டர் சி.நடராசன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

<u>நீர்மூழ்கி தடுப்பணை</u>

சித்தன்வாழூர் அருகே வெட்டாற்றில் நன்னிலம் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.14 லட்சம் மதிப்பில் 85 மீட்டர் நீளத்திற்கு ஆற்றின் குறுக்கே 21 அடி ஆழத்தில் நீர் மூழ்கி தடுப்பணை 95 ஆயிரம் மணல் மூட்டைகள் அடுக்கி செயல்படுத்தப்படும் பணிகளை திருவாரூர் கலெக்டர் நடராசன் பார்வையிட்டார். பின்னர் அவர் கூறியதாவது:-

தற்போது பருவ கால மாற்றங்கள் குறைவான மழை அளவினாலும், நிலத்தடி நீர் பெரிதும் பாதிப்படைந்து குறைந்து வருகிறது. குடிநீர் மற்றும் விவசாயத்திற்கான அடிப்படை தேவையான தண்ணீரை நாம் தேவையான அளவு பெறுவதற்கு நிலத்தடி நீர் பெருமளவு பயன்படுகிறது. இதனால் நிலத்தடி நீரை உயர்த்தும் வகையில் கடந்த ஆண்டு வலங்கைமான் பகுதியில் தென்குவளவேலி அருகே வெண்ணாற்றில் முதன் முதலாக இது போன்று தடுப்பணையை அமைத்ததில் அப்பகுதியின்¢ நிலத்தடி நீர் உயர்ந்துள்ளதை ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது.

சுற்றுப்புற பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணறுகளில் விவசாயிகளுக்கு உறுதுணையாக நிலத்தடி நீர் கனிசமாக உயர்ந்துள்ளது.

**<u>நிலத்தடி நீர்மட்டம்</u>**

இதனால் தொடர்ந்து கடந்த ஆண்டு மற்றும் 5 இடங்களில் இது போன்று தடுப்பணைகள் அமைக்கப்பட்டது. அபரிதமான நிலத்தடி நீர் செறிவூட்டப்பட்டதால் தொடர்ந்து மாவட்ட அளவில் தடுப்பணைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. சித்தன்வாழூர் கிராமத்தை பொருத்தமட்டில் சித்தன்வாழூர், மாத்தூர், குச்சிப்பாளையம், அமராவதி கிராமங்களை சார்ந்த 5 ஆயிரத்து 250 ஏக்கர் நிலப்பரப்பும் தொடர்ந்து சாரநத்தம் ஊராட்சி வேடம்பூர் பகுதியில் வெட்டாற்றில் அமைக்கப்படும் தடுப்பணை 1 லட்சத்து 30 ஆயிரம் மணல் மூட்டைகள் தரைக்குள் 21 அடி ஆழத்தில் அடுக்கப்பட்டு அதில் இதற்கென்று வடிவமைக்கப்பட்ட பிளாஸ்டிக் பாய்களால் மூடப்பட்டு 120 மீட்டர் நீளத்திற்கு ஆற்றின் குறுக்கே ஒன்றிய பொது நிதியிலிருந்து ரூ.18 லட்சம் மதிப்பில் அமைக்கப்படுகிறது.இதனால் சாரநத்தம், மாணிக்கமங்கலம், கண்டியூர், பூனாயிருப்பு உள்ளிட்ட கிராமங்களில் 6 ஆயிரத்து 250 ஏக்கர் நிலப்பரப்பும் இனாம்கிளியூர் ஊராட்சி பகுதியில் குடமுருட்டி ஆற்றில் பிரதமரின் கிராம வளர்ச்சி முன்னோடி திட்டத்தின் கீழ் ரூ.6 லட்சம் மதிப்பில் 66 மீட்டர் நீளத்தில் அமைக்கப்படுகின்ற தடுப்பணையால் 5 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நல்லூர், ஆவூர், மூலாழ்வாஞ்சேரி, ரெகுநாதபுரம், காருகுடி உள்ளிட்¢ட கிராமங்கள் நிலத்தடி நீர் உயர்வதால் பயன்பெறும்.

இவ்வாறு அவர் கூறினார்.

ஆய்வின்போது தாசில்தார் வெங்கட்ராமன், ஒன்றிய ஆணையர்கள் பாலசுப்பிரமணியன், தில்லை நடராஜன், வருவாய் ஆய்வாளர் ராஜேஸ், சித்தன்வாழுர் ஊராட்சிமன்ற தலைவர் கனகசபை, ஒன்றிய பொறியாளர்கள் அன்புராஜா, ரவிச்சந்திரன், ஒன்றிய பணி மேற்பார்வையாளர்கள், ஒன்றிய அலுவலர்கள் உள்பட பலர் இருந்தனர்.

**வாலாஜா ஏரி தூர்வாரும் பணி**



**நெய்வேலி,**

வடலூர் அருகே உள்ள வாலாஜா ஏரி தூர்வாரும் பணியை என்.எல்.சி. நிறுவனம் ரூ.14 கோடி செலவில் மேற்கொள்கிறது.

163 ஆண்டு பழமை வாய்ந்தது

கடலூர் மாவட்ட விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி வழங்குவதில் வடலூருக்கு அருகில் அமைந்துள்ள வாலாஜா ஏரி முக்கிய பங்கு வகிக்கிறது. 1851-ம் ஆண்டு சுமார் 1,660 ஏக்கர் பரப்பில் உருவாக்கப்பட்ட இந்த ஏரியால் சுமார் 11 ஆயிரத்து 400 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

இதன் உபரி நீரை நடு பரவனாறு ஆறு மூலம் பெருமாள் ஏரிக்கு அனுப்பி அதன் மூலம் மேலும் 20 ஆயிரம் ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறுகின்றன. இந்த ஏரி மூலம் சுமார் 200 கிராமங்கள் பயன்பெறுகின்றன. இந்த ஏரிக்கு, என்.எல்.சி. சுரங்கங்கள் மற்றும் அனல் மின்நிலையங்களில் இருந்து வெளியேற்றப்படும் நீர் மற்றும் மழை நீர் போன்றவை முக்கிய ஆதாரமாகத் திகழ்கின்றன.

தூர்வாரும் பணி

இந்த ஏரியை இதுவரை தூர்வாராததால் மணல் படிந்து இதன் கொள்ளளவு வெகுவாக குறைந்து விட்டது. அதன் மூலம் விவசாயத்திற்கு வழங்கப்படும் நீரின் அளவு குறைவதை சரி செய்ய, என்.எல்.சி. நிறுவனம் இந்த ஏரியில் தூர்வாரும்

பணியை மேற்கொள்ள முடிவு செய்தது. அதன்படி, ரூ.13 கோடியே 72 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து இந்த ஏரி தூர்வாரப்பட்டு ஆழப்படுத்தப்பட உள்ளது.

இந்த ஏரி தூர்வாரும் பணிக்கான பூமி பூஜை நேற்று முன்தினம் கரைமேடு கிராமத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் என்.எல்.சி. தலைவர் சுரேந்தர்மோகன், மாவட்ட கலெக்டர் கிர்லோஷ் குமார் ஆகியோர் கலந்து கொண்டு தூர்வாரும் பணியை தொடங்கி வைத்தனர். தொடர்ந்து விழாவில் என்.எல்.சி.தலைவர் சுரேந்திர மோகன் பேசியதாவது:-

விவசாயிகள் தங்களது நிலங்களை சுரங்கப் பணிகளுக்காக வழங்குவதன் மூலம் மட்டுமே என்.எல்.சி. நிறுவனம் சிறப்பான வளர்ச்சி பெற்றுள்ளது. எனவே, தனது வளர்ச்சியின் மூலம் பெற்ற பலனை, விவசாயிகளுடன் குறிப்பாக, நமக்கு உணவு வழங்கும் விவசாயிகளுடன், பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறது. எனவே மிகப்பெரிய இப்பணியை மேற்கொள்ள என்.எல்.சி. நிதி வழங்குகிறது. இவ்வாறு அவர் பேசினார்.

பணிக்காலம் 10 மாதம்

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் கிர்லோஷ்குமார், என்.எல்.சி. இயக்குனர்கள் சரத்குமார் ஆச்சார்யா, ராஜகோபால், ரவீந்திரநாத் ஆகியோர் கலந்து கொண்டனர். முன்னதாக, சுரங்கத்துறை செயல் இயக்குநர் செந்தமிழ்செல்வன¢ வரவேற்றார். 2-வது சுரங்க தலைமை பொதுமேலாளர் கனகாச்சலம் நன்றி கூறினார். இதில், வாலாஜா ஏரி மற்றும் பெருமாள் ஏரிகளிலிருந்து பாசனநீர் பெறும் விவசாய சங்கப் பொறுப்பாளர்கள், கரைமேடு, கொளக் குடி, பின்னலூர், துறிஞ்சிக்கொல்லை ஆகிய ஊராட்சிகளின் தலைவர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். இப்பணியை தொடர்ந்து, இந்த ஏரியின் தற்போதைய கொள்ளளவுடன், கூடுதலாக சுமார் 210 கோடி லிட்டர் நீர் பிடிக்கும் திறன் அதிகரிக்கும். தூர்வாரும் பணிகளுடன், இந்த ஏரியின் கரையை பலப்படுத்துதல், மதகுகளை பழுது பார்த்தல், கரையின் மீது சாலை அமைத்தல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பணி சுமார் 18 மாதங்களில் நிறைவடையும்.

**மண்ணச்சநல்லூரில் ரூ. 1½ கோடியில் கட்டப்பட்ட உழவர் மையம் முதல்–அமைச்சர் ஜெயலலிதா காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார்**



**மண்ணச்சநல்லூர்,**

மண்ணச்சநல்லூரில் ரூ. 1½ கோடி செலவில் கட்டப்பட்ட உழவர் மையத்தை முதல்–அமைச்சர் ஜெயலலிதா காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார்.

<u>உழவர் மையம்</u>

மண்ணச்சநல்லூரில் உள்ள வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம் சிறிய அளவிலும் நெரிசலான இடத்திலும் உள்ளது. இந்த அலுவலகத்தை விரிவுபடுத்தி விவசாயிகளுக்கு வேளாண்மை துறையின் அனைத்து உட்பிரிவின் பயன்களும் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையில் வேளாண்மைத்துறையின் பல பிரிவு துறைகள் அடங்கிய ஒருங்கிணைந்த உழவர் மையம் கட்ட முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டார். இதற்காக ரூ.1 கோடியே 46 லட்சத்து 69 ஆயிரம் நிதி ஒதுக்கப்பட்டது.

இந்த நிதியைக் கொண்டு ராசாம்பாளையம்–அய்யம்பாளையம் ரோட்டில் பெரிய அளவிலான உழவர் மைய கட்டிடம் பொதுப்பணித்துறை மூலம் கட்டப்பட்டது. புதிய உழவர் மைய கட்டிடத்தில் வேளாண்மைத்துறை, விதை சான்றளிப்பு துறை, தோட்டக்கலை துறை, வேளாண் விற்பனை–வேளாண் வணிகத்துறை, வேளாண்மை பொறியியல் துறை ஆகியவற்றின் அலுவலகங்கள், அட்மா தொழில் நுட்ப அலுவலகம், விதை பரிசோதனை நிலையம், விதை, உரம், பூச்சி கொல்லி

மருந்துகள், இடு பொருட்கள் வைப்பு கிடங்கு, விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க கூடம் போன்றவை உள்ளன.

## திறந்து வைத்தார்

இந்த உழவர் மையத்தை முதல்–அமைச்சர் ஜெயலலிதா சென்னையில் இருந்து காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார். அதைத் தொடர்ந்து உழவர் மைய கட்டிடத்தில் ஒன்றிய குழு தலைவர் பரமேஸ்வரி முருகன் குத்துவிளக்கு ஏற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் வேளாண்மை இணை இயக்குனர் குருராஜ்சிங், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் பாண்டியராஜன், துணை இயக்குனர்கள் சந்திரசேகரன், ஜெயராஜ், மண்ணச்சநல்லூர் வேளாண்மை உதவி இயக்குனர் ஜெயபால், விதை சான்று அதிகாரி ரெங்கராஜ், தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி, வேளாண்மை உதவி அலுவலர் துரைசங்கர், லெட்சுமணன், ஜீவா மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். இந்த உழவர் மையத்தில் வங்கி ஏ.டி.எம். மையம் திறக்கப்பட உள்ளது.

## பட்டுப்புழு வளர்ப்பதன் மூலம் அதிக வருமானம் கிடைக்கும் மத்திய பட்டுவாரிய இணை இயக்குனர் பேச்சு



**வடகாடு,**

நெல், வாழை, கரும்பு உள்ளிட்ட பயிர்களை விட பட்டுப்புழு வளர்ப்பதன் மூலம் அதிக வருமானம் கிடைக்கும் என்று மத்திய பட்டுவாரிய இணை இயக்குனர் கூறினார்.

விவசாயிகளுக்கு பயிற்சி

வடகாடு அருகேயுள்ள மாங்காட்டில், ஆலங்குடி பகுதி பட்டு விவசாயிகளுக்கு 15 நாட்கள் பயிற்சி அளிக்கப் பட்டு, அதன் நிறைவு விழா நடைபெற்றது. விழாவிற்கு மத்திய பட்டு வாரிய இணை இயக்குனர் டாக்டர் ஜிக்கன்னா தலைமை தாங்கினார். தமிழ் நாடு பட்டு வாரிய உதவி இயக்குனர் மல்லிகா, மத்திய பட்டுவாரிய ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மைய விஞ்ஞானி செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் ஜிக்கன்னா பேசியதாவது;-

நெல், வாழை, கரும்பு உள்ளிட்ட பயிர்களை விட பட்டுப்பழு வளர்ப்பதன் மூலம் அதிக வருமானம் கிடைக்கும். மேலும் மற்ற விவசாயத்தைப் போல பயிர் செய்துவிட்டு மாதக்கணக்கில் காத்திருக்க தேவையில்லை. மல்பரியை ஒருமுறை பயிர் செய்து அதனைக்கொண்டு பட்டுப்புழு வளர்த்து வாழ்நாள் முழுவதும் மாத வருமானம் பெறலாம். பட்டு உற்பத்தியை அதிகரிக்கவும், விவசாயிகளை ஊக்கப்படுத்தவும் நடவு மானி யாக ஏக்கருக்கு ரூ.10,500-ம், சொட்டு நீர் பாசனம் அமைக்க ஏக்கருக்கு ரூ.30 ஆயிரமும், ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 5 ஏக்கர் வரை மானியம் வழங்கப்படுகிறது.

இலவச காப்பீட்டு திட்டம்

மேலும் புழு வளர்ப்பு மனை மானியமாக 1,500 சதுர அடிக்கு ரூ.82,500-ம், தளவாட மானியம் ரூ.52,500-ம், மல்பரி விவசாயிகளுக்கு இலவச காப்பீட்டு திட்டம் உள்ளிட்ட வைகள் வழங்கப்படுகிறது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி பட்டுப்புழு வளர்ப்பதற்கு இப்பகுதி விவசாயிகள் அனை வரும் முன்வந்து பயன்பெற வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

விஞ்ஞானி செல்வராஜ், விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை இளநிலை ஆய்வாளர்கள் குழந்தைவேலு, முருகேசன், அய்யாத்துரை ஆகியோர் செய்திருந்தனர். பயிற்சியை நிறைவு செய்த 25 விவசாயிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. முடிவில் சிவக்குமார் நன்றி கூறினார்.

**200 மெட்ரிக் டன் மக்காச்சோளம் விற்பனை**



**திண்டுக்கல்,**

திண்டுக்கல் மாவட்டத்தில் விவசாயிகள் குழுக்கள் மூலம் நேரடியாக தனியார் நிறுவனங்களுக்கு 200 மெட்ரிக் டன் மக்காச்சோளம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மக்காச்சோள விவசாயிகள்

திண்டுக்கல் மாவட்டத்தில் மக்காச்சோள சாகுபடி அதிக அளவில் நடைபெற்று வருகிறது. பழனி, தொப்பம்பட்டி, ஆயக்குடி, ஒட்டன்சத்திரம், ரெட்டியார்சத்திரம் பகுதி விவசாயிகளின் முக்கிய பயிராக மக்காச்சோளம் விளங்கி வருகிறது. ஆனால், விவசாயிகளுக்கு குறைந்த அளவே லாபம் கிடைத்து வந்தது.

இதற்கு இடைத்தரகர்களின் தலையீடு அதிகமாக இருப்பதே காரணம் ஆகும். எனவே, விவசாயிகளே நேரடியாக மக்காசோளத்தை விற்பனை செய்யும் வகையில் தனியார் நிறுவனங்களுடன் இணைப்பு ஏற்படுத்தி கொடுக்க முடிவு செய்யப்பட்டது. இதற்காக வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் மாவட்டம் முழுவதும் குழுக்கள் அமைக்கப்பட்டன.

நேரடியாக விற்பனை

இதில் மக்காச்சோளம் சாகுபடி செய்த விவசாயிகளில் தலா 15 பேரை சேர்த்து குழுக்கள் உருவாக்கப்பட்டன. அதன்படி மாவட்டம் முழுவதும் மொத்தம் 72 குழுக்களில் ஆயிரத்து 80 விவசாயிகள் சேர்ந்தனர். இதையடுத்து விவசாயிகள்

உற்பத்தி செய்யும் மக்காசோளத்தை கோழி தீவனம் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டன.

அதன்படி பழனி மற்றும் உடுமலைபேட்டையில் உள்ள 2 தனியார் கோழி தீவன நிறுவனங்களுடன் மக்காசோள விவசாயிகளுக்கு தொடர்பு ஏற்படுத்தி கொடுக்கப்பட்டது. இந்த நிறுவனங்கள் மூலம் முதல்கட்டமாக பழனி, ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி பகுதிகளை சேர்ந்த விவசாயிகளிடம் இருந்து மக்காச்சோளம் வாங்கப்பட்டு வருகிறது.

200 மெட்ரிக் டன்

இந்த மக்காச்சோள விற்பனை கடந்த 3 வாரங்களாக நடைபெற்று வருகிறது. இதில் விவசாயிகளே நேரடியாக விற்பனை செய்து, பணத்தை பெற்று வருகின்றனர். இடைத்தரகர்கள் தலையீடு இல்லாததால் ஓரளவு லாபம் கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

அந்த வகையில் இதுவரை சுமார் 200 மெட்ரிக் டன் மக்காச்சோளம் விற்பனை செய்யப்பட்டு இருக்கிறது. மாவட்டத்தில் தற்போது மக்காச்சோள அறுவடை சீசன் தொடங்கி இருக்கிறது. எனவே, இன்னும் ஒருசில வாரங்களில் விற்பனை அதிகரிக்கும் என்று வேளாண் விற்பனை மற்றும் வணிக துறை உதவி இயக்குனர் செல்வராஜ் தெரிவித்தார்.

**உத்தமபாளையம் பகுதியில் தண்ணீர் இன்றி கருகும் தென்னை மரங்கள்**



உத்தமபாளையத்தில் தண்ணீர் இன்றி காய்ந்து வரும் தென்னை மரங்களை படத்தில் காணலாம்.

உத்தமபாளையம் பகுதியில் தண்ணீர் இன்றி தென்னை மரங்கள் கருகி வருகின்றன.

தென்னை சாகுபடி

தேனி மாவட்டம் உத்தம பாளையம் வயல்வெளிகள் நிறைந்த பகுதியாகும். பருவ மழை பொய்த்து போனதால் எப்போதும் பசுமையாக காட்சி அளிக்கும் உத்தம பாளையத்தில் தற்போது கடும் வறட்சி நிலவுகிறது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. கிணறுகளில் நீர் இல்லை.

பருவமழை பெய்யாமல் போனதால் நெல் பயிர்கள் தண்ணீர் இன்றி காய்ந்தன. நிலத்தடி நீர்மட்டமும் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே போவதால் தென்னை மரங்கள் தண்ணீர் இன்றி காய தொடங்கி உள்ளன. இதனால்தேங்காய் விளைச்சல் வெகுவாக பாதிக் கப்பட்டு உள்ளது. மழை பெய்யாததால் தென்னை சாகுபடி செய்துள்ள விவசாயி கள் கவலை அடைந்து உள்ளனர்.

கருகும் தென்னை

தண்ணீரை விலைக்கு வாங்கி தென்னை மரங்களுக்கு ஊற்றி வருகின்றனர் விவசாயி கள். ஒருசிலர் ஆழ்குழாயில் இருக்கும் கொஞ்சம் தண் ணீரையும் மரங்களுக்கு பாய்ச்சி வருகின்றனர். இருந் தாலும் தென்னை மரங்கள் தொடர்ந்து கருகி வருகிறது. இதையடுத்து தென்னை மரங்களை எப்படி காப்பாற்று வது என்று தெரியாமல் விவ சாயிகள் தவித்து வருன்றனர்.